

சிலம்பு உ௫ } திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௨, ஆனி { பரல் ௧௧
ஜூலை, 1951

தமிழ் வளர்ச்சிக் கழக
நான்காவதாண்டு விழா

[கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை]

(சிலம்பு உ௫, பரல் ௧௦, ௪௫௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்புலமைப் பேராசிரியர் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளையவர்கள் அரியபெரிய தலைமையுரையைக் "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாம் சொல்." என்னும் தமிழ்மறையின் தனிமாண்பு பொதுள ஆற்றினார்கள். அவர்கட்கு இயற்கையே அமைந்த இன்சொல்லடுக்கும், நன்பொருள் மிடுக்கும், நாநயப்பயனும் அவ்வுரையின்கண் ஆங்காங்குக் கெழுமியிருந்தன.

கல்வி, வணிகம், கலையொழுக்கம் முதலிய பல்வேறு துறைகளிலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பிரிக்கவொண்ணா நிலைமையில் பிணைந்துள்ள உறவுநிலைகளைப்பற்றி உளங்கொள விரித்துரைத்தார்கள். இவற்றை வலியுறுத்தும் அகப்புறச் சான்றுகள் பல பண்டைச் சங்க மருவிய பொய்யாநாவின் மேலோர் அருளிய தண்டமிழ் நூல்களிலும், பிற்றைக்காலத்து நற்றிறம்படரும் நாவலர் பாவலர் நவின்ற நல்லுரை நூல்களிலும் காணக்கிடப்பனவற்றுளிருந்து ஆழ்கடல் முத்து வீழ்வார்க்கு நல்க ஆய்ந்தெடுத்து மேலுறக்கொணர்ந்து வேண்டியாங்கு வழங்கும் வினைவலார்போன்று வியத்தகுமுறையில் விளம்பினார். பேச்சழகும் சொல்லழகும் அவர்கட்கே அமைந்த பீடுறு தனிநடையிலிருந்தன.

புலவர் பொன்னுரை

இலக்கண இலக்கியப்புலமை நிறையப்பெற்றவர்களாய், பலகாலும் மாணவர் பலர்க்கும் பல ஆண்டுகளாகச் செந்தமிழ்த் திறனைச் சீருறப் பாடஞ்சொல்லும் திருவினராய்த்திகழும் மட்டக்களப்பு திரு. வித்துவான் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் "கம்பன் காட்டிய தமிழ் நாகரிகம்" என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள்.

அருந்தமிழ்ப்பணியும் அன்பர் ஈட்டமும், பொருந்தும் புலமே பொன்னாடதனினும், திருந்திய செல்வத் திருஇடமாக, அருந்தும்பொழுதும், அங்கண் பொருந்தும்பொழுதும் உள முறக்கொள்ளும் ஒண்மையராய், கல்லூரிகளிலும், கல்லூரி யனைய கவினுறு இல்லங்களிலும் மாணவர் பலர்க்கும் நாளும் மாண்புறச் செந்தமிழ் பயிற்றும் திருத்தொண்டே சிவத்தொண் டாய் வாழ்நாளெல்லாம் வனப்புற ஆற்றிவரும் வட்டுக்கோட்டை திரு. முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள் 'தண்டமிழ்க் கோர் ஒண்பொருளாய்த்திகழும் கண்டனைய கலித்தொகை'யி னின்றும் "கண்ணீர் பெருக்கிய கலித்தொகை" என்னும் தலைப் பிட்டு மணியனைய பெருங்குரலில் புன்முறுவல்பூத்த இன்முகத் தோடு வண்ணவண்ணப் பாக்களை எண்ணமுற எடுத்தியம்பி அரியதோர் விரிவுரையாற்றினார்கள்.

முத்திறப்பொருளும் எத்திறத்தார்க்கும் முறைமையின் உணர்த்தி, அறம் பொருள் இன்பம் ஆணையின் எய்தி வாழ் வித்து வாழ்தற்கு வழிகாட்டும் வண்டமிழ் வளநூல், மணிமுடி துறந்து அருளின் அணிமுடிசூடி, அரியணைவிடுத்து அறிஞர் செறிவுறுநெஞ்சாம் உரியணை இவர்ந்து, செங்கோலையும் திறம் பெற நடாத்தும் நூல்வரை பொன்கோல் தாங்கி, நாற்படை நலமுற நாற்பொருள் அமைத்து, எய்ப்பில்வைப்பாம் செந்தமிழ் இன்பப் பெரும்பொருள் இயல்பின் ஈட்டி, வரையாது வழங்கும் வண்மைசால் சேரர்குலச்செம்மல் ஆசிரியர் இளங்கோ அடிக ளால் அருளிச்செய்யப்பெற்றது சிலப்பதிகாரம். பன்னூற் பயிற்சியோடு அந் நூற்பயிற்சி மிக்குள்ள ஆற்றலும், அறிவும், தோற்றமும், மாற்றமும், தேற்றமும் ஒருங்கமை தமிழ்ச்செல்வர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் சிலப்பதிகாரத் தின் அருமை பெருமைகளை விளக்கி விரிவுரையாற்றினார்கள்.

மேலும் பெண்களுக்குமட்டும் இயல்பாயமைந்த தனிப் பெரும் சிறப்பு, தாய்மையாகும். அது நன்மைபயக்கும் மென் மைக்கும் வன்மைக்கும் உறுதுணையாய் முன்னோடிநிற்கும். அவ்வுண்மையினையே வள்ளுவப் பெருந்தகையார்,

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை." —திருக்குறள்: எசு.

என வலியுறுத்தருளினர்.

காடு கெடுத்து நாடாக்கி, மலை அகழ்ந்து உலையா நிலை பொருள் விளைத்து, பொன் மலையெனப் பெருக்கி, இலங்கையைப் பீடுறச் செய்து ஈடும் எடுப்பும் இல்லா ஆண்மையராய் உள்ள இலங்கை இந்தியர் இந்நாள் வாழ்க்கைக்கும் வழியிலராய் விழி யிழந்து குழிவழிச் செல்வார் போன்று துன்புறுகின்றனர். அத்தகைய துன்பத்தைப் போக்குவதே அறிஞர் அருங்கடனும் எனக் கேட்போர் உள்ளங் குழைந்துருக மொழிந்தனர். அவை யினர் அனைவரும் நனிமிகப் பாராட்டினர்.

இரண்டாம்நாள்

30-4-51 திங்கட்கிழமை எண்ணியற் கலையாம் அறிவியற் (விஞ்ஞானம்) பகுதியின் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடங்கின. அரிய பெரிய அறிவியற்செய்திகளைக் கேட்போர் உளங்கொள 'எண்பொருள வாகச் செலச் சொல்ல' வேண்டுமுறைப்படி இனிமையும் தெளிவும் நனிமிகப் பெருக, திரு. டாக்டர் கிருட்டிணன் அவர்கள் பெரியதோர் விரிவுரை ஆற்றினார்கள்.

திருமதி. இராசேசுவரி அம்மையாரவர்கள் "காட்சிவாயிலாகக் கல்வி" என்பதை நகைச்சுவைமிக நவின்றார்கள்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி விரிவுரையாளர் திரு. க. ச. அருணந்தி அவர்கள் உளநூலைப்பற்றி மக்கள் உளங் கொண்டொழுகி, உய்யுமாறு விரிவுரையாற்றினார்கள்.

பிற்பகல்

திரு. நடேச பிள்ளையவர்கள் தலைமை பூண்டார்கள். வரலாற்றுப் பகுதி துவங்கப்பெற்றது. திரு. பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரவர்கள் தமிழர்வரலாற்றை (சரித்திரம்) எடுத்துரைத்தார்கள். இலங்கையின் சிலபகுதிகளைத் தமிழ்மன்னர்கள் அழித்தனர் என்று உண்மைக்கு மாறுகச் சிலர் கூறும் கூற்றுக் கலப்பற்ற பொய்யேயாகும் என வலிய சான்றுகள் பலகொண்டு வற்புறுத்துரைத்தார்கள்.

திரு. எஸ். எம். கமால்தீன் அவர்கள் "இஸ்லாமியரும் தமிழும்" என்னும் பொருள்பற்றி 'இழுமென இழிதரும் விழுமிய அருவிபோன்று' அமிழ்துறழ் மொழியால் விரிவுரை யாற்றினார்கள். இலங்கைவாழ் மகம்மதியர்களின் தாய்மொழி தேனினுமினிய செந்தமிழ்மொழியே என்று வரலாற்று முறை வழுவாது மறுக்கவொண்ணுத தக்க பல சான்றுகள் நிறுவி விளக்கினார்கள்.

பேராசிரியர் சீனிவாசாச்சாரியாரவர்கள் வரும் வாய்ப்புப் பெற்றிலர். அவர்கட்கு ஈடாக, திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

“சர்வோதயம்” என்னும் தனிப்பொருளை விளக்கிச் சர்தார் வேதரத்தினம் அவர்கள் விரிவாகப் பேசினார்கள்.

இரவு நிகழ்ந்த எழிற்கூத்து

தொன்று தொட்டு நின்று நிலவும் பாவைக்கூத்து, சிறப்புற நிகழ்ந்தது. கண்ணுக்கினிய காட்சியாக இருந்தது. களிப்பு மிகுதியாக இருந்தது. இராமநாதன் கல்லூரி மாணவியர் நடனமும் நல்ல முறையாக அமைந்திருந்தது.*

மூன்றாம்நாள்

1—5—51. செவ்வாய்க்கிழமை பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் தலைமை பூண்டார்கள். “இக்கால இலக்கியங்கள்” என்னும் பொருள்பற்றி விளக்கினார்கள்.

திரு. பண்டிதர், கணபதிப் பிள்ளை அவர்கள் “தமிழ்” என்னும் பொருள்பற்றி விரிவாகவும் இனிமையுறவும் விரிவுரை ஆற்றினார்கள்.

காந்தீயம்

திரு. டாக்டர் மு. வரதராசனாரவர்கள் திருக்குறள் என்னும் பொருள்பற்றிச் சீர்சால் விரிவுரையொன்று ஆற்றினார்கள். உலகப்பொது நூலாய்ச் செந்தமிழ்த் திருமறையாய், நந்தமிழ் நாகரிகக் கருவூலமாய், நந்தாமணி விளக்காய் நலமுறத் தோன்றும் ஈடும் எடுப்புமில்லா வீடருள் திருக்குறள் இன்றைக்கு இரண்டாயிர யாண்டுகளுக்குமுன் திருவள்ளுவ நாயனாரால் தெய்வமுதனூலாய் இயற்றி அருளப்பெற்றது என்றனர்.

நாம் வாழுங்காலத்து நம்கண்முன்னர் நமக்கெல்லாம் உய்வ[illegible]டித் தந்தருளித் தமக்கென வாழாப் பிறர்க்குரியாள

---

* குறிப்பு: மாணவர்கட்கு உடற்பயிற்சி உரம் தருவதுபோன்று மாணவியர்க்கு நடனம் உரந்தருவதாகும். மேலும் நல்ல கருத்துக்களை வளர்ப்பிக்கவும் வளர்க்கவும் வழியாகும். இக்கலைகளெல்லாம் திருக்கோவிலின்கண் நிகழுமாறு நம்முன்னோர்கள் அமைத்ததும் அரசனையுள்ளிட்டு அனைவரும் வந்து கண்டு உண்மை கடைப்பிடித்து ஒழுகற்கும், ஆண்டவன் நினைவகலாது அறம் பொருளின்பங்களில் திரியாது செம்மையுற வாழ்தற்கும், நற்கலைகள் நாளும் வளர்ந்தோங்கி நாடும் மொழியும் பீடுறற்கும் தக்க வாயிலாக இருப்பது பற்றியேயாம். கலைவல்லார் மக்கள்பால் பொருளை விழையாது மாண்பமை மன்னர்பால் வேண்டி நின்றமையால் ஒழுக்கங்குன்ற விழுத்தகு முறையில் நடித்தனர். அஃதக்[illegible]லவமைவு.

ராய்ச் சிறந்திருந்த காந்தியடிகள் கைக்கொண்டொழுகிய கடவுள்நெறி காந்தீயம் என்ப. அது மெய்யான பொதுவான வாழ்க்கை வரலாற்று முறைநூலாகும். அதுவே சிறந்த இலக்கியமாகும். அவ் இலக்கியததிற்கு முற்றும் வாய்ந்த இலக்கணமாகவுள்ளது திருக்குறள் என்றனர். இவ்வுண்மையைப் பல்வேறு ஆராய்ச்சிகளால் நன்கு வலியுறுத்து நிறுவினர்.

திருமதி. மகேசுவரி மகாதேவா அவர்கள் “சமய இலக்கியங்கள்” என்னும் பொருள்பற்றி அரியதோர் அழகமை விரிவுரை ஆற்றினார்கள்.

பகலுணவின் பொருட்டுப் பேரவை கலைந்து மீண்டும் கூடுவதாயிற்று. அப்பொழுது ஐம்பதினாயிர மக்கள் குழுமியிருந்து பேரவையைச் சிறப்புறுத்தினர்.

பாராட்டல்

தமிழ்வளர்ச்சிக் கழகத்தலைவர் திரு. அவினாசிலிங்கம் செட்டியாரவர்கள் சுருக்கமும் பெருக்கமுமாகிய இனியதோர் சொற்பொழிவாற்றிப் பரிசுபெற்ற நூலாசிரியர்களைப் பாராட்டினார்கள். “நாம் பழம்பெருமை பேசி வாழமுடியாது; பண்டைக்காலத் தமிழ்மக்களைப் போன்று நாமும் சிறந்து உலகநாகரிகத்துக்கு உதவவேண்டுமானால் நம்முடைய முற்காலத்துப் பண்பாட்டையும் இக்காலத்து அறிவையும் பயன்படுத்தித் தலைசிறந்த அறிவும் நாகரிகமும் உடையவராய்த் திகழல்வேண்டும்,” என வலியுறுத்துப் பேசினார்கள்.

பரிசுபெற்ற புலவர் தலைமணி ஐவருள் இருவரே விழாவுக்கு வந்து தத்தம் பரிசுகளை நேரில் பெற்றுக்கொண்டனர். பெருமக்கள் தாங்கள் படிக்கும் தகையமைநூலின் ஆசிரியச் செல்வர்களை நேரில் காணப் பெரிதும் விழைகின்றனர். ஏனைய எழுத்தாளர்களும் உடனொத்த ஒருதனிப் பெருந்தகையாருடன் ஒருங்கிணைந்து கூடி நகலினான் ஆம் விண்ணாட்டும் கிட்டாத இனிமைப் பண்பாம் விருந்தமிழ்துண்ண நனி விருப்புறுகின்றனர். இவ்விரு வேறு வாய்ப்புகளும் ஒருங்கே எய்துதற்கு வாயிலாகிய இத்தகைய விழாக்களுக்கு வரும் ஆண்டுகளிலேனும் பரிசுபெறும் எழுத்தாளர்கள் அனைவர்களும் வரல் வேண்டுமென்பது எனது பேரவா என்றனர்.

பொன்னாடை போர்த்தல்

ஈழத்துப் பேரறிஞராக விளங்கும் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ கணேசய்யர் அவர்களுக்கு விலையேறப்பெற்ற பொற்பட்டாடை புனையப்பெற்றது. ஒல்காப் பெரும்புகழ்த் தொல்

காப்பிய முதலாம் பெருநூல்களை விளக்கமுறக் குறிப்புரைக ளுடன் வெளிப்படுத்தி ஆசிரிய நிலேசேர் மாணவர்கட்கும் அனைத்து நூலும் அழகறிவன்புடன் பன்னாள் பயிற்றுவித்து வரும் பண்பை இவர்கட்குப் பட்டாடை சாத்திப் பாராட்டியது பாராட்டத்தக்கதேயாம்.

திரு. அனந்தவைத்தியநாதன் அவர்கள் இரசாயனமும் வாழ்க்கையும் என்பதுபற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் பேசினார்கள். மேசை, நாற்காலி, தொலேபன்னி (Telephone) சீப்பு, கண்ணாடி முதலிய பல்வேறு பயனுடைப் பொருள்கள் உருவாந்தகைசேர் மண்ணனைய ஒன்றால் (Plastic) ஆக்கப்படும் முறையை அறிவுறுத்தினார்கள்.

உணவு முறை

திருமதி. புதுடில்லி மருந்துழைச் செல்வியர் (Nurse) கல் லூரிப் பேராசிரியர் டாக்டர் இராசாம்பாள் தேவதாஸ் அவர் கள் உணவு முறைகளைப்பற்றிப் பேசினார்கள். அரிசியைத் தீட்டி வெள்ளையாகவும், கோதுமையைத் தீட்டி மைதாமாவாக வும், வெல்லத்தை வெண்ணிறச் சர்க்கரையாகவும், உப்பைக் காய்ச்சி வெள்ளுப்பாகவும் உண்பதில் உடலுக்கு வேண்டும் உய் வுறை ஆற்றற்பொருள்கள் கழிந்து விடுகின்றன என்பதை யாவ ரும் ஒப்புக்கொள்ளுமுறையில் எளிதாகவும் இனிதாகவும் எடுத் துரைத்தார்கள். நெல்லிக்காயில் எல்லாவகை ஆற்றல்களும் நிரம்பியிருக்கும் வியத்தகுமுறையை விளக்கினார்கள். (ஒளவை யுண்ட நெல்லிக்கனியை நினைவுகூர்க.) "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு," என்னும் மூதுரையை விளக்கி மொழிந்தனர். மக்களுடைய பழக்க வழக்கங்கள் அவரவர்கள் உட்கொள்ளும் உணவுக்குத் தக்கவாறு மாறும் என்பதை உளங்கொள வுரைத் தார்கள். இவ்வுண்மையை நிலேநாட்டப் பல்வேறு கதைகள் பகர்ந்தனர். 'பொன்னாங்காணி,' என்னும் உயர்ந்த கீரை யுணவை ஒருவர் உண்டு வருவரேயாயின், புலமும் மேனியும் பொன்னாய்ப் பொலிவர். அவ்வுண்மை உய்த்துணர்வார்க்கு அச் சொல்லின்கண்ணே அமையப்பெற்றிருப்பது அருமை யன்றோ? என்னை, "பொன் + ஆனன் + காண் + நீ," = பொன் னாங்காணி என வழங்கி வருவதாலென்க. அம்மையாரவர்கள் உணவு முறைகளைப்பற்றிப்பேசிய ஒவ்வொரு சொல்லும் நகைச் சுவை நிரம்பியே இருந்தது.

வானவெளி மின்னியக்கம்

யாழ்ப்பாணம் அறிவியல் (விஞ்ஞானம்) விரிவுரையாளர் திரு. சிதம்பரம் பிள்ளையவர்கள், "வானவெளியில் மின்சாரமும்

வாழ்க்கையும்,'' என்னும் பொருள்கள்பற்றிப் பெரிதும் வியக்கச் சொற்பொழிவாற்றினார்கள். விண்மீன்களைப்பற்றிய புதுப் புதுச் செய்திகளைக் கோவைப்படுத்தி அழகுறப் பேசினார்கள்.

திண்ணைப்பள்ளிச் சிறப்பு

திரு. E. W. அரியநாயகம் அவர்கள், "பண்டைக் கிராமங்களின் கல்விப் பயிற்சி,'' என்னும் பொருள்பற்றி விரிவுரையாற்றினார்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவர். வார்தா ஹிந்துஸ்தானி தாலிமி சங்கச் செயலாளரும் ஆவர். வாழ்க்கைக்கு வேண்டும் கல்வி இன்றியமையாததென்று காந்தியடிகள் பரப்பிய அரும் பெரும்கருத்தை விளக்கிக் கூறினார்கள். அக்கல்வி முறையைக்காண வருமாறு அனைவரையும் அன்புடன் அழைத்தார்கள்.

வாழும் இலக்கியம்

பரமேசுரக்கல்வி விரிவுரையாளர் திரு. வித்துவான் சு. வேந்தனரவர்கள், "வாழும் இலக்கியம்,'' என்னும் பொருள்பற்றி விரிவுரை யாற்றினார்கள். இவர்கள் தமிழிலக்கியத் துறையில் பெரிதும் உழைத்துப் பெயரும் பீடுமொன்றப் பெற்றுத் திகழும் பெரும்புலவர். இவர்கள் ஆற்றும் விரிவுரை சொன்னயம் பொருள்நயம் மிகப் பொலிவதுடன், குரல்நயமும் கூடுதலாகக் காணப்பெறுகின்றது. இவர்தம் உரத்தகுரல் எல்லார் செவிப் புலனிலும் இனிதாகச் சென்று இயையும் தன்மையது. இத்தகைய ஆண்மைக் குரலினர்க்கு ஒலிபெருக்கியும் வேண்டுவதின்று. இயல்பாகவே இச்சிரிய தலைப்புடைய பேச்சு இறுதியாக அமைந்தது சாலப் பொருத்தமேயாம். என்னை? இலக்கியம் வாழ்வதற்கு இயன்றவாறு இடையறாது உழைத்துவரும் இக்கழக நோக்கம் இதுவே என்பதைப் புலப்படுத்தினமையான் என்க. இது, 'சொல்லின் முடிவின் அப்பொருள் முடித்தல்,' என்னும் புணர்ப்பினைப் புணர்ப்பதாகும்.

நன்றி விளம்பல்

திரு. 'கல்கி' அவர்களும் கோவை டி. ஆர். சுந்தரம் அவர்களும் தமிழ்விழாவைச் சிறப்பாக நடத்தித் தந்த சொலற்கரும் பெற்றிமை வாய்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழ்மெய்யன்பர்களைப் பாராட்டி நன்றி கூறினர். அதன் வாயிலாக உளம் கனிந்த இனியதோர் சொற்பொழிவாற்றினர். நன்றியுரை முற்றும் உண்மையேயன்றி இம்மியும் முகமன் அன்று. பேரவைக்கண் குழுமியிருந்த இலட்சக் கணக்கான இருபால் எழிலுறு மக்களின் வழிமொழிதலாம் இந்நன்றியுரை பாராட்டத்தக்கது.

இசையரங்கு

திருமதி எம். எல். வசந்தகுமாரி அவர்களின் இசையரங்கு மூன்று மணி நேரம் ஆன்றபெரும் தமிழ்ச்சுவையுடன் நிகழ்ந்தது. சிறந்த பொருட்செறிவு நிரம்பிய பல பாடல்களைப் பாடி அவையினரைக் களிக்கச்செய்தனர். அவையினர் இன்னிசைச் செவிவிருந்துண்டு மன்னிய வண்டெனத் தம்மை மறந்து இன்பந் திளைத்து மகிழ்ந்தனர். "எல்லோரும் காந்தி சொல் கேட்க வேண்டு"மென்னும் நல்லுரையுடன் இசையரங்கு நிறைவுற்றது.

தாளாண்மையர்

தமிழ் நாட்டின்கண் நிகழ்ந்த சிறப்பினும் மிக்க சிறப்பாக யாழ்ப்பாண நாட்டின்கண் நிகழ்ந்தமை மிகமிகப் போற்றத் தக்கது. இச்சிறப்பிற்கு உறுதுணையா யுடனுறைந்துழைத்த மெய்யன்பர் பலராவர். அவர்தம்முள் சிலர் பெயர்களையேனும் கூறல் வேண்டுவது இன்றியமையாததாகின்றது. திரு. நடேச பிள்ளை, திரு. கனகரத்தினம் இவ்விரு பெருந்தகையாரையும் பற்றிய சிறு குறிப்பொன்று முன்வந்துள்ளது. திரு. ச. அம்பிகை பாகன் அவர்கள் முழுநேர ஊழியராய் முழுமனமுடன் உழைத்து வெற்றியுறச் செய்தனர். வரவேற்புக்குழுவின் செயலாளராக விளங்கியவர்கள் திரு. முதலியார் சின்னத்தம்பியவர்களும், திரு. நவரத்தினம் அவர்களும் ஆவர். பொருளாளர் டாக்டர் சி. குருசாமி அவர்களும் திரு. நடேசன் அவர்களும் ஆவர். விழாவின் போக்குவரத்துக்கு வேண்டும் துணை புரிநதவர் திரு. வழக்கறிஞர் அருளம்பலம் அவர்களாவர். உணவுப் பகுதிக்குத் தலைவராயிருந்தவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் முன்வேலை பார்த்துள்ள ஆசிரியர் திரு. இராசராசேசுவரன் அவர்கள். விரிவஞ்சி இத்துடன் அமைகின்றும்.

பயனுறுத்தல்

விழா நிகழ்ச்சிகளை வீட்டிலிருந்தவாறு விழைந்தாங்கு கேட்கும் வாய்ப்பும், ஆங்காங்குள்ள அரிய திரைப்படக் காட்சி வழிக்காணும் அமைவும், வழிநடைகளில் பொறியூர்தி வாயிலாக அவ்வப்போது கேட்கும் செவ்வியும் அருமையுற இலங்கை அரசியற் செய்திப் பகுதியினரும், வானொலி நிலையத்தாரும் செய்தமைத்திருந்தனர். விழாவினுக்கு வந்துள்ளவர்களின் நலங்கருதி 'நோய்க்கிடங்கொடா' நிலையத்தார் நிலையமும், ஊர் காவலர் நிலையமும் விழாப்பந்தலையொட்டி அமைந்திருந்தன.

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்ப்புலவர்
வாழ்க கழகவிழா மற்று.

சங்க இலக்கியங்களில் இல்லையா?

[சு. குமாரஸ்வாமி ஆச்சாரி B.O L. மயிலம்]

(சிலம்பு ௨௫, பரல் ௧0, ௪௮௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

4 இவ்வாறு களவொழுக்கம் நீடிக்கையில் ஊரவர் அலர் தூற்றுவர். அதனால் வருந்தும் தலைவியை நோக்கிய தோழி, தலைவிக்கும், தனக்கும், தலைவனுக்கும், குலத்திற்கும் குற்றம் வாராதமுறையில் தாய்க்கு எடுத்துரைப்பாள். தாய் அச்சொல்லுக்கிணங்காவிட்டால் தலைவன் நமக்கு எளியனென்றோ உயர்ந்தோனென்றோ கூறுவாள். ஏனெனில், மகளின் மணாளன் தம் வழியொழுகுபவன் ஆயினும் தம்மில் உயர்ந்தோனாயினும் மகளைத்தர இசைவர் அன்றோ! தலைவனிடத்துத் தலைவிக்குள்ள வேட்கையையும் தலைவியிடத்துத் தலைவனுக்குள்ள வேட்கையையும் கூறுவாள். தலைவியை அத்தலைவனுக்கே தரவேண்டுமென்று உறுதியாகக் கூறுவாள். வெறியாட்டும் கட்டும் கழங்கும் இட்டுரைத்துழி வேலனொடாவது பிறரோடாவது உசாவுவாள். பின்னர் 'நீரில் மூழ்கிய தலைவியைக் காப்பாற்றினான்,' என்றும் 'விலங்குகளால் துரத்தப்பட்டவளைக் காப்பாற்றினான்,' என்றும் யாதேனுமோர் ஏதுவை ஏறட்டுக்கொண்டு தலைவனும் தலைவியும் தலைப்பட்டமை கூறுவாள். இவ்வாறு பன்முறை முயன்று தலைவியின் விருப்புக்குத் தாய் இணங்குமாறு செய்வாள். மகளின் உடல்வேறுபாடு கண்ட தாய் தானாக வினாவியவிடத்துத்தான் தோழி இவ்வாறெல்லாம் கூறுவாள். தாய் கேளாதிருக்கும்போதே தோழி கூறுவதுமுண்டு. தலைவன் வந்து கேட்கத் தலைவியின் தமர் மறுப்பதும், தலைவனையன்றிப் பிறனொருவன் வரைவு வேண்டிவரத் தமர் உடன்படுவதும் தோழி தானே தாயர்க்கு உண்மையுணர்த்தும் காரணங்களாம். இவ்வாறு அறத்தொடு நிற்கும் பகுதி மகளுக்குரிய மணாளனைத் தாய்தந்தையர் தேர்ந்தெடுக்கும் வழக்கந்தான் அக்காலத்து மிகுதியாயிருந்தது என்பதை நன்கு விளக்குகின்றதன்றோ!

5. தமர் வரைவு உடன்படாத வழி, தோழி,—'நும் பிரிவு அன்னை யறுக்கும், நும்மோடு துன்பம் துணையாக உடனுறைவதைவிட எங்களுக்கு வேறு இன்பமுமுண்டோ?' எனத் தலைவனுக்குக் கூறித் தலைவியை உடன்கொண்டு போகும்படி தூண்டுவாள். அவன் உடன்பட்ட பின்னர், 'தமர் அறியாது தலைவனுடன் அவனூர்க்குச் செல்க,' எனத் தலைவிக்குக் கூறுவாள். அதுகேட்ட தலைவி, "உயிரோம்பியென்றும், துறவாத

நாணம் துறப்பது வேண்டலின் தொல்லுலகில், பிறவாதொழிதல் நன்றே ஒரு காலமும் பெண் பிறப்பே,'' என இரங்குவாள். அவளது கருத்துணர்ந்த தோழி, 'உயிரினும் சிறந்தது நாண், நாணினும் சிறந்தது மாசிலாக் கற்பு,' எனக்கூறத் தலைவி முன்னோர் மொழியைப் பொன்னேபோற் போற்றும் கருத்துடையளாதலின், 'நெஞ்சே, வளைநெகிழ அழுங்கண்ணோடு இரங்கித் தனித்து வாழும் வாழ்க்கையை இனி நாம் எய்தாதிருப்போம் ஆதலின், அவருடைய நாடுசெல்ல எழு,' என மனம் துணிந்து காமக் கிழவனுள்வழிச்செல்ல ஒருப்படுவாள். ''நீயும் கலங்கா மனத்தையாகி என் சொல்நயந்தனை கேண்மோ......இன்னும தோய்க நின் முலையே,'' என விடுப்பாள். தலைவியும் வைகு புலர் விடியலில் தன் மெய்கரந்து தன் கால் அரியமை சிலம்பு கழற்றாது தலைவனோடு செல்வாள். சிலம்பைக் கழற்றி வைத்து விட்டுச் செல்வதும் உண்டு. காளையொடு அருஞ்சுரம் போகும் தலைவி கல்லென் சீறூரில் எல்லிடைத் தங்கிச்செல்ல, அவ்வூர்ப் புனையிழை மகளிரைப் பயந்த மனைகெழு பெண்டிர், இவர்கள் தமர் அறியாது செல்வதற்காக வருந்துவர். (ஐங்: 382) மகட் போக்கிய தாய் தன் மகள் மீண்டும் தன்னில்லுக்கு வரவேண்டும் எனத் தெய்வம் பராவுவாள்; ''அஞ்சிலோதி வரக் கரைந்தீமே,'' எனக் காக்கையையும் இரப்பாள். அவ்வாறு அவள் அலைந்து கொண்டிருக்கையில் தலைவனது ஊரினின்றும் வருவாரைக் காணின், ''நும்மனைச் சிலம்பு கழீஇயயரினும் எம்மனை வதுவை நன்மணம் கழி,'' கெனக் காளையை யீன்ற தாய்க்குச் சொன்மின் என இரந்து கூறுவாள். மகள் தலைவனுடன் மீண்டு வந்தவிடத்துத் தாய் தன் சுற்றத்தாரை யழைத்துவந்து தன் மகளைக் காட்டிக்காட்டி மனமகிழ்வாள்.

களவொழுக்க மாகாது என மகளைக் கண்டித்த தாய், தன்னையறியாது தலைவனோடு சென்ற மகளை ஏற்றுக்கொண்டனளே எனின், அவ்வாறு ஏற்றுக்கொண்டதற்குக் காரணம் மக்களிடத்து இயல்பாயுள்ள தாயன்பே தவிர வேறின்று. மகளின் தாயொழிந்த ஏனைய பெண்டிர்—காதலொடு இல்லறம் நிகழ்த்துவோர், மகளிரைப் பயந்தவர்—இக்களவொழுக்கத்தினை விரும்பவில்லை (ஐங்: 382) எனவே பெற்றோர் மணம் புணர்க்கக்கூடி வாழ்வதுதான் சிறந்தது என்பது வெளிப்படையன்றோ!

6. ''வெளிப்பட வரைதல் படாமை வரைதலென் றாயிரண் டென்ப வரைதலாறே,'' என்பர் இலக்கண நூலோர். எனினும், ''வெளிப்படை தானே கற்பினொடொப்பினும்,'' (தொல்-களவு: 51) என்பதால் வெளிப்படாமை வரைதலே சிறந்

தது என்பது விளங்கும். களவு வெளிப்படத் தலைவன் தலைவியை உடன்கொண்டு தன்னூர்க்குச்செல்லினும் வரைவு இன்றியமையாது வேண்டப்படுவது என்பதை, "வரையாது பிரிதல் கிழவோற்கில்லை," (தொல்-களவு: 51) என்னும் சூத்திரத்தொடர் வலியுறுத்தும். இதனால், எங்ஙனமாயினும் தலைவன் தலைவியை வரைந்துகொள்ளல் வேண்டும் என்பதே தொல்லாசிரியர் கருத்தென்பது நன்கு புலனாகின்ற தன்றோ! வரைவு என்பது கரண நிகழ்ச்சியேயாம். சிலம்பு கழித்தலும் பின்னர் வதுவை மணம் நிகழ்த்தலும் உண்டு என்பதை இலக்கண இலக்கியங்கள், நன்கு உணர்த்துகின்றன. ஆதலின், திருமணச் சடங்கு முற்காலத்து முண்டு என்பது வெள்ளிடை மலையே. சடங்கு எவ்வெவ்வாறு நிகழ்ந்ததெனக் கூறுதற்குச் சான்றில்லையெனக் கூறலாமே யொழிய, மணச்சடங்கே நிகழ்ந்ததில்லையெனக் கூறுதற்கில்லை.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே,"

எனக் கற்பு என்னும் சொற்குப் பொருள் கூறுவர் தொல்காப்பியனார். "களவு வெளிப்பட்ட வழியும் வெளிப்படாத வழியும், மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சியின் உரிமை பூண்ட வழியும், 'கொண்டானிற் சிறந்த தெய்வமில்லை, இவனை இன்னவாறு வழிபடுக,' எனக் கற்பித்து, தலைவியின் தந்தையும் தாயும் தன்னையரும் மாதுலனும் சான்றோரும் தலைவியைக் கொடுக்க, ஒத்த குலத்தானாகிய தலைவன் வதுவைச் சடங்கொடு பொருந்திக் கொளவான்," என்பர் உரையாசிரியர்.

'களவின்கண் ஒழுகியவழி அவ்விருவரும் கரணத்தின் அமையாது இல்லறம் நிகழ்ததலாகாதோ?' எனின்,—'அஃதாகாது,' என்பதற்காகக், "கரணமொடு புணர," என்றார் என்பர் உரையாசிரியர். 'வதுவைச் சடங்கு முற்காலத்து நிகழ்ந்ததுண்டோ?' என்பார்க்குத் தொல்காப்பியர், 'முன்னர் கரணம் இன்றியே இல்வாழ்க்கை நடந்தது. பொய்யும் வழுவும் தோன்றியபின்னர் வதுவைச் சடங்கு தோன்றியது. அச்சடங்கு முதன் முதல் மேலோர்களால் கையாளப்பட்டது. பின்னர் கீழோர் அதனை யேற்றனர்,' என்று கூறுகிறார். வதுவைச் சடங்கு இன்றியமையாதது என்னும் தொல்காப்பியர், 'தலைவியை அவளின் தாய் தந்தையர் தர மணம் புணரவேண்டும்,' எனக், "கொடைக்குரி மரபினோர் கொடுப்ப," என்னும் தொடரால் வற்புறுத்துகின்றார்.

"கொடுப்போரின்றியும் கரணம் உண்டே," எனத் தொல்காப்பியரே கூறுவதால் கொடுப்பாரின்றிக் கொள்ளலாகாதோ?

வதுவைச் சடங்கு தானே இன்றியமையாதது? எனின், முதலில் "கொடுப்பக் கொள்வதுவே," எனக்கூறி இரண்டாவதாகக் "கொடுப்போரின்றியும் கரண முண்டே," எனக் கூறுவதனால், முன்னர்க் கூறியதே சிறந்ததென்பதும், பின்னர்க் கூறியது அவ்வளவு சிறந்ததன்று என்பதும் தாமே போதரும். ஆதலின், மகளுக்குரிய மணாளனைத் தேர்வது பெற்றோர் கடன் என்பது வெளிப்படையாம்.

7. "நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி மகட்பாடஞ்சிய மகட்பால்," என மகட்பாற் காஞ்சிக்கு இலக்கணம் கூறுவர் தொல்காப்பியனார்.

> "கருங்கண் கொண்ட நெருங்கல் வெம்முலை
> மைய னோக்கிற் றையலை நயந்தோர்
> அளியர்தாமே ; அவள் தன்னை மாரே
> செல்வம் வேண்டார் செருப்புகல் வேண்டி
> நிரலல் லோர்க்குத் தரலோ வில்லெனக்
> கழிப்பிணிப் பலகையர் கதுவாய் வாளர்
> குழாஅங் கொண்ட குருதியம் புலவொடு
> கழாஅத் தலையர் கருங்கடை நெடுவேல்
> இன்ன மறவர்த் தாயினு மன்றே
> என்னா வதுகொல் தானே
> பன்னல் வேலியிப் பணைநல் லூரே." (புறம் : 345)

என்பர் அடைநெடுங்கல்வியார். இவற்றால் தம்மொடு சமமானவர்க்குத்தான் பெற்றோர் தம் மகளைத் தருவர் என்பதும் சமனல்லாதார்க்குத் தாரார் என்பதும் தலைவியின் பெற்றோரது விருப்பமின்றி மணம் நிகழ்த்தலாகாது என்பதும் போதரும். இதனானும் மகளுக்குரிய மணாளனைத் தேர்பவர் தாய் தந்தை முதலிய தமரே யென்பது வெளிப்படையாம்.

> 8. "ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
> ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
> மிக்கோ னாயினும் கடிவரை யின்றே."

என்னும் சூத்திரத்தால் (தொல்-களவு : 2) 'கொடுப்பாரு மடுப்பாருமின்றி ஊழாற் கூட்டுவிக்கப்படுபவர் ஒத்த கிழவனும் கிழத்தியு மாவர்,' எனக் குறிக்கின்றார் தொல்காப்பியர். அவரே,

> "பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
> டுருவு நிறுத்த காம வாயில்
> நிறையே யருளே யுணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."

என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரத்தால் பத்துவகையில் ஒப்புமை வேண்டும் எனக்குறிக்கின்றார். அவ்வொப்புமைகளுள் 'பிறப்பு எனப்படுவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், நுளையர், குறவர் என்றாற்போல வருங்குலம்' என்பர் உரையாசிரியர்கள். எனவே, காதலர்கள் ஒத்த குலத்தில்—சாதியில் பிறந்தவராதல் வேண்டும். அக்குலத்தினுள்ளோரெல்லாம் சிறப்பாக ஒவ்வாமையான் அச்சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவுடையராயிருத்தல் வேண்டும். அவ்விருவரும் சோம்பியிராமல் தத்தமக்குரிய இயல்பின் முயற்சி (ஆண்மை) யுடையராயிருத்தல் வேண்டும். ஒருவரினொருவர் முதியரன்றி ஒத்த பருவத்தினராதல் வேண்டும் வனப்பு, அன்பு, அடக்கம், அருள், அறிவு, செல்வம் ஆகியவைகளில் ஒத்தவராதல் வேண்டும்,' என்பது நம் முன்னோர் கொள்கையாம். இவ்வொப்புமை கூறிய தொல்காப்பியனார்,

"நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
யின்புற லேழைமை மறப்போ டொப்புமை
யென்றிவை யின்மை யென்மனார் புலவர்."

எனக் கூறுகின்றார். இவை பத்தும் காதலரிடத்தே இல்லாதிருக்க வேண்டும் என்பதும் முன்னோர் கொள்கையாம். 'நிம்பிரி, கொடுமை, புறமொழி, வன்சொல், பொச்சாப்பு ஆகிய இவை விலக்கப்படவேண்டும்,' என்பதனால் இவைகளுக்கு மாறுபட்டனவாகிய அன்பும் அருளும் இருக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.' மடிமை கூடாது' என்பதனால் ஆண்மையுடையராதல் வேண்டும் என்பது பெறப்படும். 'குடிமையின்புறலும் வியப்பும் ஆகா என்பதனால் பிறப்பு, குடி, திரு இவை உடையராதல் வேண்டும் என்பது வலியுறும். 'ஏழைமையும் மறப்பும் கூடா' என்பதனால் உணர்வுடையராதல் வேண்டும் என்பது வலியுறும். 'வியப்பு, குடிமையின்புறல், ஒப்புமை ஆகியவை கூடா' என்பதனால் நிறையுடையராதல் வேண்டும் என்பதும், 'நிம்பிரி, கொடுமை, பொச்சாப்பு, மறத்தல் ஆகியவை கூடா' என்பதனால் நிறுத்தகாமவாயிலுக்குக் காரணமாகிய பருவமும் உருவமும் இருத்தல் வேண்டும் என்பதும் வலியுறும். பத்துவகையான பண்புகள்—ஆகா என்பதனால் பத்துவகையான ஒப்புமை இன்றியமையாதது என்பது வலியுறுத்தப்பட்டது.

"குன்ற நாடன் குடிநன்குடையன், கூடுநர்ப்பிரியலன், கெடுநாமொழியலன், அன்பினனென நீ, வல்லகூறி வாய்வதிற் புணர்த்தோய், நல்லைகாணில் காதலந்தோழி,..............பாண்

மகன், எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும், புதுவது புனைந்த திறத்தினும், வதுவை நாளினுமினியனுலெமக்கே." (அகம் : 352) எனத் தோழிக்குத் தலைமகள் கூறுகின்றாள். இதனால், தோழி தலைவனது பண்பினை ஆய்ந்து கூட்டினாள் என்பதும், காதலர் குடிமையும் அன்பும் அருளும் உணர்வும் உடையர் என்பதும் பெறப்படும். "அன்பும் மடனும் சாயலு மியல்பும் என்பு நெகிழ்க்கும் கிளவியும் பிறவும் ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி" (அகம்: 225) என்பதனால் காதலர் அன்பு, நிறை, உரு, உணர்வு முதலியன பொருந்தப் பெற்றார் என்பது பெறப்படும். இப்பத்தினுள்ளும் உருவே பெண்களால் நோக்கப்பட்டது என்பது, "தண்ணந்துறைவன் இவட்கமைந்தனனற்றே தனக்கமைந்தின்றவள் மாமைக்கவினே." (ஐங் : 108) என்பதனால் பெறப்படும்.

"அவனைநீ, ஆயர்மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற
நோயும் களைகுவை மன்" (கலி : 111)

"ஆயர் மகனையின் ஆயர்மகள் நீயாயின்
நின்வெய்யோ னாயின் அவன் வெய்யை நீயாயின்
அன்னைநோ தக்கதோ இல்லைமன் நின்னெஞ்சம்
அன்னை நெஞ்சாகப் பெறின்." (கலி : 107)

"விரிநீ ருடுக்கை யுலகம் பெறினும்
அருநெறி யாயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே." (கலி : 114)

என்பனவற்றால் காதலரைத் தேர்வதில் பிறப்பு (சாதி) நோக்கப்பட்டது என்பது புலனாகும். இக்கருத்தையே, செவிலிக்குரிய துறைகளுள் ஒன்றான "இருபாற் குடிப்பொருளியல்பு" என்னும் துறை வலியுறுத்தும். இவ்வகையின் உரிய காதலரைத் தேர்ந்தெடுப்பது உலக அனுபவமுடையார்க்குத்தானே இயலும். ஆதலின் தாய்தந்தையர் முதலிய தமரே மகளுக்குரிய மணாளனைத் தேர்ந்தெடுத்தற்குரியவர் என்பது விசதமன்றோ!

9. "நடுவணைந்திணையாகிய ஒ:த்த காமத்தின் மிக்குங் குறைந்தும் வருதலானும், எண்வகை மணத்திலும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்பன அத்திணைப்பாற் படுதலானும், இந்நான்கு மணமும் மேன்மக்கள் மாட்டு நிகழ்தலானும், இவை உலகினுள் பெருவழக்கெனப் பயின்று வருதலானும் அது பெருந்திணையெனக் கூறப்பட்டது" எனவும், "நடுவணைந்திணையாகிய ஒத்த கூட்டம் பெருவழக்கிற்றன்றோ? எனின், அஃது அன்பும் குலனும் முதலாயின ஒத்து வருவது உலகினுள் அரிதாகலின் அருகியல்லது வாராதென்க. இந்

நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணமும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்குளவழி இன்பம் உளதாமெனவும், கைக்கிளை ஒருதலை வேட்கையெனவும் பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிதெனவும் கூறுதலான் இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க,'' எனவும் உரையாசிரியர் இளம்பூரணர் கூறுவது, மேன்மக்கள் களவொழுக்கத்தைக் கைக்கொள்ளவில்லை யென்பதையும்—தாமே தமியராய்க்கூடி மணம் புணர்ந்து வாழும் வழக்கம் சிறுவரவிற்று என்பதையும் வலியுறுத்துகின்றதன்றோ! பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் என்னும் நால்வகை மணமுமே மேன்மக்கள்மாட்டு நிகழ்வன என்பதால் ஏனைய அசுரமும், இராக்கதமும், பைசாசமும் கீழ்மக்கள் மாட்டு நிகழ்வன என்பது தாமேபோதரும். பாரதம், இராமாயணம், சீவகசிந்தாமணி முதலிய இலக்கியங்கள், அசுர மணமும் மேன்மக்களால்—அரசரால்—கொள்ளப்பட்டதெனப் பகர்கின்றன. உலகினுள் பெருவழக்கினவாகிய நால்வகை மணங்களுள், பிரமம் என்பது, கன்னியை அணிகலனணிந்து பிரமசாரியா யிருப்பானுக்குத் தானமாகக் கொடுப்பதாம். பிரசாபத்தியமாவது, மகட்கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டிய வழி இருமுது குரவரும் இயைந்து கொடுப்பதாம். ஆரிடமாவது, ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கொடுப்பதாம். தெய்வமாவது, வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள்ளும் ஒருவற்கு வேள்வித்தீ முன்னர்த் தம் மகளைக்கொடுப்பதாம். இவற்றுள் பிரமத்தை அறன் நிலை யென்றும், பிரசாபத்தியத்தை ஒப்பு என்றும், ஆரிடத்தைப் பொருள்கோள் என்றும், செந்தமிழில் கூறுவர். அவ்வாறு கூறுதற்குரிய காரணத்தை அச்சொற்களே உணர்த்தும். இந்நால்வகை மணங்களினும் கொடுப்போரின்றிக் கரணமில்லையன்றோ! அசுர மணமும், வில்லேற்றினலாவது, திரிபன்றி யெய்தலாலாவது கோடற்குரியனெனக் கூறியவழி, அது செய்தாற்குக் கொடுப்பதாதலால் ஆண்டும் கொடுப்போரின்றிக் கரணம் நிகழ்வதில்லையென உணர்க. எனவே தம் மக்கட்குரிய காதலரைத் தேர்ந்தெடுப்பது தாய் தந்தையராதியோர் கடமையாம் என்பது நன்கு புலனாகின்றது.

10. காதலராவா ரிருவர்க்கும் அன்பு (நிறுத்தகாமவாயில்) இன்றியமையாத தொன்றன்றோ! உலகில் பெருவழக்காகிய அறனிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம் ஆகிய நால்வகை மணத்தினும் மணம்புணர்க்கும் பெரியோர்க்கு மன இசைவு உண்டேயன்றி, மணம்புணரும் தலைவன் தலைவியாகிய

இருவர் மாட்டும் ஒத்த அன்பு இருக்குமெனக் கருதுவது இயலாதாகலின், தாமே ஒத்துப் புணரும் காமக்கூட்டம் சிறந்ததன்றோ? சிறந்த முறையைத்தானே பின்பற்றவேண்டும்? என்ற வினா வெழலாம். காமக்கூட்டம்—களவின் வழிவந்து கற்பு நெறியில் வாழ்வது—சிறந்த—தொன்றே என்பது யாவர்க்கும் உடன்பாடே. "அகத்திணையாவது அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக்குறைபாடுடையராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக்கருதுவராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும் இவர் புறப்பொருட் குரியராயினரென்க," என "அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்," என்னும் தொடர்க்கு உரை கூறும் இளம்பூரணர் கூறுவர். இதனால் காமக்கூட்டம் நன்னிலையில் அமைவது அரிது என்பது போதரும்.

இதுவரை கூறியவற்றால், களவொழுக்கம் சிறுவரவிற்று என்பதும், அது நன்னிலையில் அமைவது அரிதென்பதும், மனைகெழுபெண்டிர் அவ்வொழுக்கத்தை விரும்பா என்பதும், ஈன்ற தாயும் களவொழுக்கம் மேற்கொள்ளும் மகளைக் கண்டிப்பாள் என்பதும், உலக அனுபவமில்லாத ஆண்களும் பெண்களும் தம் நல்வாழ்வுக்குரிய காதலரைத் தாமே தேர்ந்துகொள்வது இயலாதென்பதும் நன்கு விளங்குகின்றன. ஆதலின் தம் மக்களுக்குரிய காதலரைத் தேர்ந்தெடுப்பது தாய் தந்தையர் கடமையேயாம் என்பதும் மக்கள் தம் கருத்தைப் பெற்றோர்க்குணர்த்தவேண்டியவர் என்பதும் வெள்ளிடை மலையென விளங்குகின்றதன்றோ!

(தொடரும்.)

முது தமிழ்ப் புலவர்

மு. நல்லதம்பி அவர்களின் பெரும்பிரிவு

[வீர. சோம. வீரப்ப செட்டியார்]

சுற்றமொடு சூழவிருந்து பொல்லாங்கின்றி எல்லோர்க்கும் நல்லோராய் வாழ்ந்து, அமிழ்தினுமினிய பழம்பெருந் தமிழைப் பாங்குடன் கற்று, ஆயிரமாயிர மாணவர்களுக்கு உளமறிந்து உண்மையோடு சீர்தூக்கித் திறனறிந்து செப்பி, அவர்கள் கற்று வல்லுநரென்னும் பெயர்கொள்ளத் தாமின்புற்று வாழ்ந்த பெருந்தகை, முதுபெரும் புலவர்மணி பண்டித, மு. நல்லதம்பி யார், இறைவன் திருவடியடைந்த செய்திகேட்டு ஆறுத்துயருறு கின்றோம். முத்தமிழ் வல்ல இத்தகையார் பிரிவு, ஈழநாட்டிற் கும் இந்தியத் தமிழ்நாட்டிற்கும் என்! ஆர்கலியுலகத்துள்ள அருந்தமிழ்ப் புலவருலகிற்கும் அமைதிகொள்ள முடியாத பேரிழப்பாகும்.

"அற்றாரைத் தாங்கிய ஐவே லசதி அணிவரைமேல்
முற்றா முகிழ்முலை எவ்வாறு சென்றனள் முத்தமிழ்நூல்
கற்றார்ப் பிரிவும கல்லா ரிணக்கமும் கைப்பொருளொன்
றற்றா ரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே."

என்ற இப்பாட்டின் பொருள் எவ்வளவு உண்மையாக இருக் கின்றது. அந்தோ வாழ்க்கை கொடிது! கொடிது!

கண்டோருள்ளம் கனிவுறப்பேசும் கருத்துடைப் புலவரை இழந்தோம். பண்டைச் சிறப்பெலாம் பாங்குடன் தொகுத் துத் தண்டமிழிலக்கிய வடிவாய் யாத்த ஒப்புயர்விலா உண்மைப் புலவரை இழந்தோம். ஆணந்தரும்ப அருளுமார்வமும் மாணவருளங்கொள மாண்புடன் மொழிந்து வேணவா விஞ்ச விருப்பொடு எப்பொருளும் பேணுதற் றொழிலாக்கொண்ட பெரும்புலவரை இழந்தோம்.

சொல்லால் விளக்க எல்லோரும் மகிழ வல்லாரிவரென்று வாழ்த்திடக் கேட்ட வண்டமிழ்வல்லுநரை இனி என்று காண் போம். கல்வி வல்லார் காதலித்தளித்த முதுதமிழ்ப் புலவரென் றுரைபெறு சிறப்பினுக்குரிய அருளறநிரம்பிய ஆண்டகையை என்று காண்போம்.

கற்றார்க்குதவு நெறி காட்டு கருணையாளர் பெற்றபெரு அன்பின் பெருஞ்சுடராம், உற்றவர்கள தமிழன்பர் எனக் கேட்டால் உவந்துரை பலவாற்றும் உத்தமர், செற்றமிலாப்

பெருங்குணத்துப் பீடுடைய நெறிசான்ற பெரும்புலவரை என்று காண்போம்.

ஆன்ற குடிப்பிறப்பானும் அன்புடைமையானும் அன்னார் பண்புடைமை வெளிப்படும். சுற்றரிடத்துக் காட்டும் கழி பேருவகை தனித்தமர்ந்த பெருஞ்சிறப்பியல்புகளிலொன்று கும். அழுக்காறற்றவர்; தண்ணளி நிரம்பியவர்; ஒருகாலப் பழகினும் இவர்களிடத்து மறுகாலச் செல்லவே உள்ளம் அவாவி நிற்கும்.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்."

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இவர் சிறந்த எடுத்துக்காட் டாவார்.

ஒரு நூலைச் செப்புமாற்றலில் அதனுட் கருத்துக்களையும் நுண்ணிய பொருள்களையும் திண்ணிதினுய்ந்து எடுத்தியம்பி விளக்கம் தரும்பொழுது ஐயப்பாடே இல்லாதிருக்கும். பொரு ளியல்புகளை விரித்தெடுத்துரைக்கும்போழ்து சீரிய செந்தமிழ்ச் சுவை துளும்பும். அப்பொருள் எந்நலமும் குறையாது ஊன்றி யறிகின்ற உண்மைக் கருத்தினைத் தன்னகத்தே கொண்டதாக விருக்கும். கருத்தினை ஆராயும்போழ்து நல்லியல்பின் நாட் டத்திற்கே நம்மை ஈர்த்துச் செல்லும்.

யான் புலவர் பாண்டியனுர் அவர்களிடத்துப் பாடங்கேட்ட ஞான்று, பண்டித நல்லதம்பியவர்களும் தமக்கொழிந்த நேரத் தில் யாப்பருங்கல விருத்தியும் கலித்தொகையும் பிற சங்கநூற் களும் பாடம் சொல்லப் பயனடைந்தனன். செய்யுளியல் பாட மோதும்பொழுது அன்னருள்ளம் புதுச்செய்யுளொன்றைத் தமிழ்மொழிக்கு வழங்கியதாகவே இருக்கும். அவர்களுடைய செய்யுட் பகுதிகள், சீரும் சிறப்புமுடையன. உவமான உவ மேயக் கருத்தோடியைந்து விளங்குவன. ஓங்கிய ஓசை நய மும் விழுமிய பொருளாழமுங்கொண்டன. ஓசை யொழுங்கு கள் நன்கனம் அமைந்த இவர்களின் பாக்கள் இன்பம் பயப்பன வாகும். நுண்பொருளளவாய் இவர்கள் எடுத்துக் காட்டும் கற்பனைப் பகுதி கற்றோர் மகிழும் களஞ்சியமெனலாம். இவர் களது "மணித்தாய் நாடும மரதன் ஓட்டமும்". என்ற நூலிற்கு அரசினர் முதற்பரிசு வழங்கினுர்கள். இவர்களது தமிழ்விடு தூது என்னும் அச்சிற்கு வராத நூல், சொன்னயம் பொருணயம் மிக்கதொன்று. அருட்டிரு விபுலாநந்த அடிகளது பேரன்பிற்கு உரித்தானதொரு நூலாகும். விபுலாநந்தர் இவர்க ளிடத்து மிக ஈடுபாடுடையவர்கள். அடிகள் 'பிரபுத்தபாரத்'

ஆசிரியராகச் சென்றபொழுது ஈழநாட்டை விட்டகன்றதி லிருந்து அங்குச் சேர்ந்தவரை நிகழ்ந்தனவற்றையும் தாம கண்டின்புற்றனவற்றையும் தொகுத்து பண்டித நல்லதம்பி யவர்களுக்கு வரைந்த முடங்கலின் வாயிலாக அடி களது அன்பு எத்தகைய தெனபது தெரியவரும். "மனக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப் பாவலன்" என்றி யம்பினர். இன்னோரன்ன எத்தனை ஏற்றம் கற்பிக்கப்பட்டார் கள், அஃதனைத்தும் பொருந்துமுயர் மொழிகள். விபுலாநந் தரின் அன்பிற்கும் அருளுக்கும் கடமைப்பட்ட செந்நாப் புல வர் நல்லதம்பியவர்கள், அடிகளிடத்து முதன்முதலில் என்னை அழைத்துப்போய் அறிமுகப்படுத்திவைத்தார்கள். அன்றவர் கள் சொன்ன,

> "நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
> பண்புடை யாளர் தொடர்பு."

என்ற பொய்யாமொழி என்னெஞ்சில் ஆழப்பதிந்து கிடக்கின் றது. அடிகளைக் காரைக்குடியிற் கண்டு அளவளாவியபோது நல்ல தம்பியாரின் பெருந்தன்மையையும் புலமைத் திறத்தை யும் பெருமைப்படப் புகன்றவை, என்றென்றும் மறக்கமுடியாத தொன்றாகும்.

கொழும்பு சகிராக் கல்லூரியிற் றும் தலைமைத் தமிழாசிரிய ராக இருபது யாண்டுகளுக்குமேற் பணியாற்றியிருக்கிறார்கள். அஞ்ஞான்று சகிராக் கல்லூரியே தமிழ்மணம் கமழ்ந்தது. முகம்மதிய மாணவர் பலர், இன்று தனித்தமிழ்ப்பற்றுடையவர்க ளாக விளங்கும் பெருமையுடையவர்களெனின், அது நல்லதம் பிப் பாவலரின் அருந்தொண்டால் வந்ததேயாகும். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான இப்பெருஞ்சொல் விளக்கப் பெரி யார், மாணவரிடத்து ஏதமில் கல்வியை இனிமை ததும்பப் புகட்டி அழியாச் சிறப்பைப் பெற்றவர். பிரின்ஸிபாலாக விருந்த ஜனுப் ஐயா அவர்கள், இவர்களிடத்துப் பெருநன்மதிப் புடையவர்.

எளிமையும், தூய உள்ளமும், பணிவான இன்சொல்லும், பிறர்க்குக் கொடுத்துதவும் பெற்றியும், கற்றுரிடத்துக் கருத் தமைந்த வார்த்தையும், ஐயப்பொருளை வினவி அரும்பொருள் கோடலும் இவர்களின் கொள்கை. எவர்க்கும் எள்ளளவேனும் தீது கனவிலுமெண்ணுத்தலைமையர். வல்லாங்கு வாழ்துமென் ரறது எல்லார்க்கும் நல்கி இயல்புறும் பெற்றியர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் சிலகாலம் சிறந்த தமிழ்த்தொண்டு செய்ய நேர்ந்தது. ஆனல், கழக மாணவர்

களது நல்வினை இல்லாமையால் நீண்டநாள் அத்தொண்டினைத் தொடர்ந்து செய்ய முடியாது போயிற்று.

சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளையவர்கள் இவர்களின் ஆருயிர்ப் புலமை நண்பருட் சிறந்தவர். அப்பெருந்தகையாரது உள்ளம், இவர்களது பிரிவு கேட்டு என்படுங்கொல்?

“ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்.”

என்ற மொழிக்கியைய வாழ்ந்த சீலர்.

அண்மையில் (29-4-51) யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது தமிழ்விழாவிற்றும் கண்ணீர் பெருக்கிய கலித்தொகை என்னும் பொருள் குறித்துச் சங்க மருவிய தங்கத்தமிழின் சிறப்பை எல்லாம் கேட்போருள்ளம் கனிவுறக் கிளர்ந்தெடுத்தியம்பினர். அகப்பொருட் சுவையின் பகுதிகளையும் அப்பொருளிற் றமிழர் கண்ட பேருண்மைகளையும் செவ்விதினாய்ந்து கூறினார்கள். என்னே! தலைவன் பொருள்வயிற் பிரிதலைச் செப்புங்கால்று கண்ணீர் பெருக்கிய தலைவியின் உள்ளமுழுமியிரும் கண்ணெதிரே காண்பித்த காட்சிநயம், என்றும் மறக்கற் பாலதொன்றன்றாகும். பிரிவையுணர்த்திப் பேசிய பெரும்புலவர், பத்துநாட்களிற் றம் பிரிவை யுணர்த்தியே பேசினார் போலும். வருங்கால நிகழ்ச்சியை உணர்த்த வல்லவர்கள் வண்டமிழ்வாணர் என்பதைப் பல்லாயிரக்கணக்கான மக்களிடை நின்று மெய்ப்பித்தார் போலும்.

முதுதமிழ்ப் புலவர் நல்லதம்பியவர்களது ஆவி தமிழ்த்தாய் மடியி லின்றுயில் கொள்க. அவர்களது குடும்பத்திற்குப் பேரருளுடைய பெருமான் தன் றிருவருளைச் சிறப்ப வழங்குக.

“புன்முறுவல் கொள்முகன்மன் பொய்யுரையா நாவினன்மன்
இன்பத் தமிழ்மொழியும் ஏந்தல்மன்—அன்புநிறை
உள்ளஞ்சேர் ஆண்மையன்மன் ஒண்மைநல்ல நம்பிமன்
வள்ளலடி சேர்ந்தனன்மன் வாழ்த்து.”

நாஞ்சில் வள்ளுவன்

[வித்துவான், கு. நாராயணன்]

மிகப்பழமையான பாக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் புறநானூறு, நமக்குப் பல வள்ளல்களின் பெயரையும் அவர்களைப் பாடிய பழந்தமிழ்ச் செல்வர்களையும் அறிவிக்கின்றது. சங்கம் மருவிய காலத்தே வாழ்ந்த வள்ளல்கள் பலருள், ஈண்டாராய எடுத்துக்கொண்ட நாஞ்சில் வள்ளுவனும் ஒருவன். அவனைப்பற்றிய சில செய்திகளைக் கீழே ஆராய்வாம்.

நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய புலவர்கள் ஒரு சிறைப் பெரியனார், மருதனிள நாகனார், ஔவையார், கருவூர்க்கதப் பிள்ளை என்னும் நால்வரே. அவர்கள் பாடிய பாக்கள் ஐந்தே புறநானூற்றில் உள. அவை துணையாகக்கொண்டு சிலவற்றைத் தீர்மானிக்கலாம்.

அச்செந்நாப் புலவர்பெருமக்களுள் ஒருவராகிய மருதனிள நாகனார், நாஞ்சில் வள்ளுவனை நோக்கிப் பரிசில் தருக என்னும் பொருளமைந்த பரிசில் கடாநிலைத்துறையில் "சுவலழுந்தப் பலகாய," என்று பாடிய புறப்பாட்டின் திறத்தினைக் காண்க.

புலவர் கூறுகிறார்: "நாஞ்சில் பொருந! நான் இப்போது வந்துவிட்டேன். எனக்குப் பரிசில் தந்துதான் ஆகவேண்டும். நான் பொய்பேசமாட்டேன். மெய்யே பேசுவன்; கேள். நான் உனக்குப் பிடித்தமான மற்றொரு சமயம் வந்து பரிசில் பெற்றுப் போக இயலாது. ஏனெனின், போர்முனை எய்தும் வீரனின் வாழ்க்கை, புல்நுனைப் பனிநீரொக்கும். உன்னுடைய வேந்தன் நினக்கு விழுப்பொருளும் தண்ணடையும் எஞ்சாது கொடுத்தல் வல்லன். ஆதலின் நீயும்,

"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா(டு)
இரந்துகோள் தக்க(து) உடைத்து."

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கிணங்கச் செஞ்சோற்றுக்கடன் கழித்தற் பொருட்டுப் போர்க்களத்து உயிர்நீத்தற்கஞ்சாய்; அங்ஙனம் ஏதேனும் பெரும்போர் வந்துறின் நின்னைக் காண்டல் இயலாது. அதனால் போர் வருவதன் முன்னை பரிசில் தந்து விடுவாயாக," என்று.

புறநானூற்றில் முதல் 266 பாட்டுக்களுக்குப் பழைய உரை, விழையும் முறையில் எழுதப்பட்டுள்ளது. அவ்வுரையை எழுதியவர் பெயர் இன்றுகாறும் அறியப்படவில்லை. நேரிய உரை வகுத்தருளிய அப்புறநானூற்றுரையாசிரியர் ஏனைப் பாட்டுக்களுக்கும் உரைவகுத்திருப்பாரேல் அல்லது உரை கிடைத்திருக்குமேல், யான் ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டிய இன்றியமையாமை இராது என்றே நினைக்கின்றேன்.

இனி மேலைப்புறப்பாட்டிற்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர், உரையின் இறுதியில் "ஈதலானுன் வேந்தே" என்னும் பகுதியிலுள்ள "வேந்து" என்ற சொல் யாரைக் குறிக்கும் என்பதை விளக்குவான் வேண்டி, "வேந்து என்றது சேரனை," என்று குறித்துள்ளார். இது பொருந்துமா என்பதே ஈண்டு ஆராயப்படும். இங்ஙனம் உரையாசிரியர் கூறியவதனால் இவன் சேரனிடம் அன்புற்று அவனுக்கு அடங்கிய ஓர் படைத்தலைவனாய் இருந்தான் என்பது வெளியாகின்றது. இதனையே தழுவி, டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களும் புறநானூற்று முகவுரைக்குப்பின் பாடப்பட்டோர் வரலாற்றிற் குறித்துப் போந்தார்.

இஃதிவ்வாறாக நாஞ்சில் வள்ளுவனைக் கருவூர்க்கதப்பிள்ளை என்பவர் பாடிய "தென்பவ்வத்து முத்துப் பூண்டு" என்னும் 380-ஆம் புறப்பாட்டில்,

"இன்னிசைய விறல் வென்றித்
தென்னவர் வயமறவன்."

என வரும் அடிகள் முற்கூறிய புறநானூற்று உரையாசிரியர் கருத்தோடு முரணுதல் காண்க. இக்கூறிய புறப்பாட்டடிகளான், நாஞ்சில் வள்ளுவன் ஓர் மறச்சாதியினன் என்பதூஉம், பாண்டியர்க்கு அடங்கிய ஓர் போர்வீரன் என்பதுவும், அறியக் கிடக்கின்றன. இதனையே இதற்குக் குறிப்புரை எழுதிய ஐயரவர்களும் "நாஞ்சில் வள்ளுவன் மறச்சாதியினன் என்றும் பாண்டியர்க்குரிய படைவீரன் என்றும் தெரிகிறது," எனக் குறித்துப் போந்தார். எனவே புறநானூற்றுரையாசிரியர், நாஞ்சில் வள்ளுவனைச் சேரனுக்கு அடங்கிய ஓர் வீரன் என்று தாம் கூறுவதினும், கருவூர்க்கதப்பிள்ளை என்னும் சங்ககாலப்புலவரே தம்முடைய பாட்டில், பாண்டியர்க்கடங்கிய ஓர் வீரன் என்னும் கருத்துப்படக்கூறும் கூற்று, வலியுடைத்தன்றோ.

இனி நாஞ்சில் வள்ளுவன், ஒரு ஞான்று சேரனுக்கு அடங்கிய ஓர் போர்வீரனாகவும், மற்றொரு ஞான்று பாண்டியர்க்கடங்கிய ஓர் போர்வீரனாகவும் இருந்தான் எனக்கொள்ளின்,

புறநானூற்று உரையாசிரியர் "சேரன்" என்று கூறியதில் பிழையின்று என்பர் ஒருசாரார். அங்ஙனம் கொள்ளுதற்கு யாதேனும் ஓர் சான்று வேண்டாவோ? நாஞ்சில் வள்ளுவனைப் பற்றிய பாக்கள் இத்துணையே பிறிதில்லை. அகப்பட்டவற்றுள் ஒருபாட்டேனும் அவன் சேரற்கு உரியவன் என்பதைக் கூற வில்லை. அதற்கு மாறாகப் பாண்டியர்க்குரியவன் என்று சான்று பகர்கின்றது, "தென்னவர்வயமறவன்" என்னும் புறப் பாட்டடி.

அன்றியும் பண்டைக்காலத்தில் நாஞ்சில்நாடு பாண்டிய நாட்டின் ஒருபகுதியாகத்தான் இருந்தது. அஃது ஒவ்வொரு கற்றோர் மனத்திலும் தெற்றெனத் தோன்றியது. அவ்வாறே பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள் எழுதிய "மனோன் மணீயம்" என்னும் நாடக நூலில் குடிலன் வாய்ச்சொல் மூலமாக நாஞ்சில்நாடு பாண்டியர்க்கு உரியது என்பது புலப் படுத்தப்பட்டுள்ளமை காண்க. இதனாலும் நாஞ்சில்நாட்டை யாண்ட வள்ளல், பாண்டியர்க்கு அடங்கிய ஓர்வீரன் என்பது பெறுதும்.

எனவே 139-ம் புறப்பாட்டு உரையில் "வேந்து என்றது சேரனை," என்று கூறியுள்ளது, பழைய உரையாசிரியர் உரை யன்று எனவும், அது பிற்காலத்தில் ஏடு பெயர்த்து எழுதுவோ ராலோ அல்லது பயின்றவர்களாலோ சேர்க்கப்பட்டதாதல் வேண்டும் எனவும் கூறத்தகும்.

ஆனால் இங்ஙனம் "சேரன்" என்று கூறியதற்கு ஒரு காரணம் இருக்கலாம் என்று தோன்றுகின்றது. "ஏற்றுக உலையே" என்னும் 172-ஆம் புறப்பாட்டிற்குக் குறிப்புரை எழுதிய ஐயரவர்கள், பிட்டங்கொற்றன் சேரனுடைய வீரன் என்பதற்குப் பல சான்றுகள் எடுத்துக் காட்டினர். அவற்றுள் "மரைபிரித்துண்ட" என்னும் 170-ஆம் புறப்பாட்டின் 8-ஆம் அடியும் ஒன்று. அவ்வடி,

"மலைகெழு நாடன் கூர்வேற் பிட்டன்," என்பது. இதற்கு "மலைபொருந்திய நாட்டை உடையவனாகிய கூரியவேலை உடைய பிட்டன்," என்பது பழைய உரை. இவ்வடியில் மலைநாடு என்பது குறிப்பிடப்பட்டமையின் இவன் சேரர்க்கு உரியன் என்பதற்கு இதுவும் ஒருசான்று என்று ஐயரவர்கள் கொண் டிருத்தல்வேண்டும். இங்ஙனமே "உயர்சிமைய உழாஅ நாஞ்சிற் பொருந," என்னும் 139-ஆம் புறப்பாட்டடியில் மலைநாடு என்பது கூறப்பட்டுள்ளமையின் அதனை உடையவன், மலைநாட் டரசனாகிய சேரனுக்கு உரியவன் என்று கொண்டார் போலும்.

இனித் "தென்னவர் வயமறவன்" என்பதற்குத் தென்னவரை எதிர்த்து வென்றிகொண்ட சேரர்க்குரிய மறவன் என்று பொருள் கோடுமோ எனின், சொற்புணர்த்தார்க்கு அது கருத்தாக இருந்தல் இயலாது; அது கருத்தாயின் விளங்கச் சொற்புணர்ப்பர்மன். அன்றியும் "திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்," என்னும் 179-ஆம் புறப்பாட்டடிக்குப், "பாண்டியர்க்குரிய மறவன்," எனப் பொருள் விரித்தவாறு காண்க. எனவே நாஞ்சில் வள்ளுவன் பாண்டியர்க்கடங்கிய ஓர் போர் வீரன் என்பது முடிவு.

இனி நாஞ்சில் வள்ளுவன் இயற்பெயர் யாது என்பதை ஆய்வாம். இதனையறிய நுட்பமான ஆராய்ச்சி யாதொன்றும் வேண்டுவதில்லை. மேல் எடுத்தாளப்பட்ட 380-ஆம் புறப்பாட்டிலேயே,

"வல்வேற் கந்தன் நல்லிசை யல்லது" என்னும் அடியை நோக்குக. அவ்வடிக்குக் குறிப்புரை வரையும் ஐயரவர்கள் "கந்தன் என்பது நாஞ்சில் மலைத்தலைவர் பரம்பரையில் உள்ளாரும் இப்பாட்டுடைத்தலைவனுமாகிய ஒருவன் பெயர்," என்று குறித்துள்ளார். இதிலிருந்து ஒரு சிறைப்பெரியனார், மருதனிளநாகனார், ஒளவையார், கருவூர்க்கதப்பிள்ளை முதலிய புலவர்கள் காலத்தில் இருந்த நாஞ்சில் வள்ளுவனுக்கு உரிய இயற்பெயர் "கந்தன்" என்பது போதரும்.

இதுகாறும் கூறியவாற்றால் நாஞ்சில் வள்ளுவன் பாண்டியர்க்கடங்கிய ஓர் வீரன் என்பதும், அவன் பெயர் கந்தன் என்பதும், போதரும். இதனைத் தமிழுலகம் ஆராய்ந்து கொள்வதாகுக.

நெருஞ்சி

[செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமிபிள்ளை]

(சிலம்பு ௨௫, பரல் ௧௦, ௪௨௩-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுகாறும் ஆய்ந்தவாற்றால் அந் நெருஞ்சி பாழிடங்களிலேயே பற்றிப் படருமென்பதும், அது மிக நெருக்கமாக அடர்ந்து படருமென்பதும் கண்டாம்.

பூக்களின் இயற்கை

இனி, அவைகளின் பூக்களின் தன்மையைக் குறித்து ஆய்வாம்.

மோசிகீரனார் என்னும் புலவர் பெருமான், கொண்கானங் கிழான் என்னும் குறுநில மன்னன் புகழைக் கூறுங்கால்,

> "பாழூர் நெருஞ்சிப் பசலை வான்பூ
> ஏர்தரு சுடரின் எதிர்கொண் டாஅங்கு
> இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்
> கொண்பெருங் கானத்துக் கிழவன்
> தண்டார் அகலம் நோக்கின மலர்ந்தே." (புறம் : ௧௫௫)

'பாழ்பட்ட ஊரில் படர்ந்துள்ள நெருஞ்சியின் பொன்னிறமுள்ள சிறந்த பூக்களானவை, எழுந்து வருகின்ற ஞாயிற்றை நேர்கண்டவாறு போல, வறுமையுற்ற புலவர்தம் உண்கலமானவை, புகழ் விளங்குகின்ற கொண்பெருங்கானத்துக்குத் தலைவனுடைய குளிர்ந்த மாலையை அணிந்த திருமார்பை நோக்கி மலர்ந்தன,' என்பதாம்.

இதில், 'ஞாயிற்றைக்கண்ட நெருஞ்சிப் பூக்கள், ஞாயிற்றையே நோக்கி நின்றதுபோல, புலவர்தம் உண்கலங்களும் (முகங்களும்) கொண்கானத்துக் கிழான் மார்பையே நோக்கி மலர்ந்து நின்றன,' என்னும் உவமையால் நெருஞ்சிப்பூக்கள் ஞாயிற்றை நோக்கி நின்றமை உணர்த்தப்படுகின்றது.

இனி, கொங்குவேள் தந்த கொழுந்தமிழ்ச் செல்வமாகிய பெருங்கதையுள்ளும்,

> "செங்கதிர் விரும்பும் பைங்கொடி நெருஞ்சிப்
> பொன்புனை மலரின் புகற்சி போல
> வெறுத்த வேட்கைத் தாழுளம் சிறப்பக்
> காதலற்கு அவாஅம் காம நோக்கம்."
> (பெருங். இலாவாண, ௫ : ௧௭ - ௧௯.)

'செங்கதிராகிய ஞாயிற்றை விரும்பும் பசிய கொடியையுடைய நெருஞ்சிப் பூக்கள்போல, மிக்க விருப்பத்தையுடைய காதலர்களின் காதல் வேட்கை, காதலனையே விரும்புகின்றது,' என நெருஞ்சி மலர்கள் ஞாயிற்றை நோக்கி நின்ற தன்மையை உணர்த்துவதால் அறியலாம்.

ஒரு தலைவி காதலனோடு கூடிக்களித்து மகிழ்ந்திருந்தாள். இடையில் தலைவன் வரைவிடைவைத்துப் பிரிய எண்ணினான். அதையறிந்த தோழி, நீ தலைவனைப் பிரிந்து வாழும் ஆற்றலுடையையோ என வினவி நின்றாள். அதற்கு அவள்,

"......................ஓங்குமலை நாடன்
ஞாயிறு அனையன் என்தோழி
நெருஞ்சி அனையஎன் பெரும்பணைத் தோளே." (குறுந் : ௩௧௫)

என, 'என் தோழியே! என் காதலர் ஞாயிற்றை ஒத்தவர்; என் தோள்கள் ஞாயிற்றை நோக்கியே செல்லும் நெருஞ்சிப் பூக்கள்போல, எம் தலைவர் சென்ற நெறியையே நோக்கியிருக்கும். அதனால் நான் மகிழ்ந்து அவர் வருங்காறும் ஆற்றியிருப்பே'னென்று பேசுகின்றவள், தன் தோளினை நெருஞ்சி மலருக்கே ஒப்பிட்டுக் கூறினாள்.

மற்றொரு தலைவன் காதற் பரத்தை இல்லிற்குச் சென்றான்; இற்பரத்தை அறிந்தாள்; அவளுக்குச் சினம் பொங்கிற்று; வஞ்சினங் கூறினாள். அவள் இந்நெருஞ்சிப் பூக்களையே எடுத்துக் கூறுகின்றாள்; அது:

"வானிடைச் சுடரொடு திரிதரு நெருஞ்சிபோல
என்னொடு திரியேன் ஆயின்." (அகம் : ௩௩௬)

எனவும்,

"வெஞ்சுடர் நோக்கும் நெருஞ்சியில் ஊரனை வெண்முறுவல்
செஞ்சுடர் வாள்முகத் தான்முன்னை என்பால் திரியலனேல்"
(இறையனார் அகப். ௪௭. மேற் : ௨௯.)

எனவும்,

"எழுஉப் புரவியொ டெழுகதிர் நோக்கிய
சிற்றிலை நெருஞ்சிப் பொற்பூ என்ன." (கல்லாடம் : ௪௭—௪௮.)

எனவும், வருவனகொண்டு அறியக்கிடக்கின்றது.

சீவகசிந்தாமணிப் பெருங்காப்பியத்தில், சீவக மன்னன் உலாப்போந்தான். அவ்வுலாக் காட்சியை அவன் செல்லும் வீதிதோறும் இள நங்கையர் கூடிக் காதல்கொண்டு பார்த்த வண்ணமாக இருந்தனர். அவர் கண்கள் அவன் போகும இடங்களெல்லாம் திரிந்தன என்பதை விளக்குங்கால், அந்நூலாசிரியர் திருத்தக்கதேவர்,

"..................அலரிமலர்த் தடங்கண் எல்லாம்
நீள்சுடர் நெறியை நோக்கும் நிரையிதழ் நெருஞ்சிப் பூப்போல்
காளைதன் தேர்செல்வீதி கலந்துடன் மொய்த்த தன்றே."
(சீவகசிந்தாமணி : ௬௬௧.)

எனவும்,

திருவெங்கைப் பெருமான் (சிவபெருமான்) தம் அடியவர்கட்குக் காட்சி தந்தருள உலாப்போந்தான். அப்பெருமானை அவன் செல்லும் தெருக்கள்தோறும் பள்ளங்கண்ட வழிப் பாய்ந்தோடும் நீர்போல், பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்னும் எழுவகைப் பருவப் பெண்களும் காதலித்துத் தொடர்ந்து சென்றனர். அதிற் பெண்ணழகெல்லாம் திரண்ட பிறங்கொளிசேர் நல்லாள் ஒருத்தி, இறைவனைக் காதலித்து மயங்கிச் சென்றனளாக, அவள் சென்ற வழியெல்லாம் அவள் தன் தோழியரும் சென்றனர் என்பதைக் குறிப்பிடுங்கால், அதன் ஆசிரியர் சிவப்பிரகாச அடிகளார்,

"நிரம்பு கதிர்நேர் நெருஞ்சியெனத் தன்பால்
திரும்புவிழி ஆயமொடு சென்றாள்." (திருவெங்கை உலா: ௩௯௨)

எனவும் வருவன காண்க.

இளஞ்சிறார்கள் ஒருவகை நெட்டிப்புல்தண்டை, வட்டவடிவ ஒருவகைத் தலையணி (சூடாமணி) போல் செய்து அதன்மேல் இப் பூக்களை ஒவ்வொன்றாக மேலே இணைத்து அதனைத் தம் தலையில் சூடி அணிசெய்து விளையாடுதல் உண்டு.

எனவே, இதுகாறும் ஆய்ந்தவற்றால் நெருஞ்சிமலர் ஞாயிறு செல்லும் வழியே சாயுமென்பதை அறிந்தாம்.

முட்களின் கடுமை

இனி, நெருஞ்சி முட்கள் எவ்வளவு கொடியன என்பதையும், அது காலில் தைத்தால் எவ்வாறு வருந்தச் செய்யுமென்பதையும் ஒரு சில எடுத்துக்காட்டுகளால் காண்பாம்.

இம் முட்கள், மூன்று கவடுகள் உள்ளனவாய்க் கூர்மை கொண்டிருக்கும்; அவைகளுள் ஒன்று, மிக நீளமாக இருக்கும். மற்ற இரண்டு, அதற்குச் சிற்றளவினவாக உள்ளடங்கி இருக்கும்; இதனை வேதாந்தநூலார் முக்குண வேறுபாட்டைக் குறிக்குங்கால் எக்குணம் மிகுதிப்பட்டு நிற்கின்றதோ, அக்குணத்துக்குக் கீழ்ப்பட்டே மற்றிரு குணங்களும் இருக்குமென்பதற்கு, இந்நெருஞ்சிமுள்ளையே உவமை காட்டுவர். அந்நீட்சியுடைய முள்ளே உள்பதிந்து புக்கி வருத்தும்.

சீவகசிந்தாமணிக் கதைத்தலைவனின் அன்னையாகிய 'விசயை' என்பாள், அவள் கணவன் 'சச்சந்த' னென்பான் 'கட்டியங்காரன்' என்னும் தன் அமைச்சன் கரவால் கொல்ல நேர்ந்த காலத்து, மயிற்பொறிவானூர்தியிற் பறந்துசென்று கீழிறங்கி அங்குள்ள ஓர் சுடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுத்து, அக்காட்டிலேயே போட்டுவிட்டு நடந்து செல்கின்றாள். அக்காடு, முள்ளும் கல்லும் காரை சூரை முதலிய முட்புதர்களும் மிகுந்த கொடுங்காடு. அதில் அவளின் மெல்லிய சிற்றடிகள் கொண்டு நடந்து சென்ற நெஞ்சம் நோரா அஞ்சும் காட்சியை வருணிக்கப்போந்த ஆசிரியர்,

"பஞ்சியடர் அனிச்சம் நெருஞ்சி ஈன்ற பழமாமென்று
அஞ்சும் மலரடிகள் அரங்கண் டன்ன அருங்காட்டுள்
குஞ்சித்து அசைந்து அசைந்து குருதிகான்று வெய்துயிரா
வஞ்சி இடைநுடங்க மயில்கை வீசி நடந்ததே."

(சீவகசிந்தாமணி : ௩௪௧.)

இதில் 'பஞ்சையும் அனிச்ச மலரையும் விரித்து அவைகளின்மீது மிதித்து நடக்குங்கால் நெருஞ்சிப்பழம்போல் வருத்துமென்று கூசுகின்ற மலரினும் மெல்லிய அடிகள், கொடுங்காட்டுள் நடந்தபோது, தரையில் கால் பாவாமல் அசைந்து அசைந்து செந்நீர் காலப் பெருமூச்செறிந்து நடந்தாள்,' என்று அதன் ஆசிரியர் நெருஞ்சி முள்ளையே உவமை காட்டியது அறிந்து அறிந்து மகிழற்குரித்து.

ஒரு தலைவன், ஒரு தலைவியை ஒரு பொழிலகத்துக் கண்டான்; காதல் கொண்டான்; புணர்ந்தான்; இல்வாழ்க்கை மேற்கொண்டான்; பரத்தையிற் பிரிந்தான்; தலைவி அவன் பிரிவு பொறுக்கலாற்றாது வருந்தியிருந்தாள்; பின் வந்தான்; அவளின் வெறுப்பைத் தீர்க்க அவளுடைய தோழியைத் தூதா (வாயிலா)க அனுப்பினான்; அவள் வந்து தலைவன் செயலை எடுத்துரைத்துச் சினம் திருமாறு வேண்டினாள். அதற்கு அவள்,

"நோமென் நெஞ்சே! நோமென் நெஞ்சே!
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோமென் நெஞ்சே."

(குறுந் : உ0உ.)

'சிறிய இலையையுடைய நெருஞ்சியின் வான்பூ கண்ணைக் கவர, அதன் அழகுக் காட்சியில் இன்புற்று நெருங்கிச்செல்ல, சென்றவுடன் அது, தன் முள்ளால் துன்புறுத்தியதுபோலக் காதலரின் அழகில் ஈடுபாடுற்று அவர் இன்பத்தில் திளைத்திருக்கும்போது, அவர் பிரிவு துன்புறுத்துகின்றது. அதனால் என்

தோழியே! என் நெஞ்சம் நோகின்றது; என் நெஞ்சம் நோகின்றது!' என்று கூறும்போது தலைவன் அழகுநலத்தில் இன்புற்றுப் பின் பிரிவால் துன்புற்ற நிலைக்கு நெருஞ்சிமுள்ளையே ஒப்பிட்டுக் கூறுவதுகொண்டு தெளிக.

இனி, திருவள்ளுவர் தந்த செவ்விய காதலன், தன் காதலியின் மென்மைத் திறத்தை வியந்து வியந்து பாராட்டிப் பேசுகின்றான். அவன் பேசும்போது 'என் காதலியின் மெல்லிய அடிகட்கு அனிச்சமலரும் அன்னத்தின் மெல்லிய மயிரும் நெருஞ்சிமுட்போல் துன்புறுத்தி வருத்துமே,' என்று உளம் நைகின்றான். அது:

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்." (திருக்குறள் : ௧௧௨௦.)

என்பது. இதில் மெல்லிய அடியை வருத்தும் தன்மைக்கு நெருஞ்சிப்பழத்தையே உவமை காட்டி விளக்கியிருப்பது பேரின்பிற் குரியதாகும்.

தொகுப்புரை

என, இதுகாறும் ஆய்ந்தவாற்றால் நெருஞ்சி மூவகைப்படுமென்பதும், அவை மருந்துப் பொருளாகவும், இலைக்கறி உணவாகவும் மக்கட்குப் பயன்படுமென்பதும், அவைகளுள் சிறுநெருஞ்சி ஒன்றென்பதும், அது, ஆள் வழக்கற்ற பாழ்நிலங்களிலே பற்றிப்படர்ந்து மண்டிக்கிடக்குமென்பதும், அதன் பூக்கள் பகலவன் செல்லும் திசையையே நோக்கித் திரும்பித் திரியுமென்பதும், அதன் முட்கள் (பழங்கள்) காலில் தைத்து முறியாது வருத்துமென்பதாவும் அறிந்தாம். அதனால், அதன் இயற்கைத்தன்மைகளை ஒருவாறு தெளிந்தாம். ஆகவே, நெருஞ்சியின் பயனும் பண்பும் எவ்வளவு வியக்கத்தக்கனவாய் இருக்கின்றன.

இதுபோன்றே பழந்தமிழ்க் கருநூல்களில் புகுந்து புகுந்து தேடி ஆய்வார்க்கு, ஒவ்வொரு இயற்கைப்பொருள்களின் பயனும் குணனும் நலனும் நன்கு தெரிவிப்பனவாம். ஆகவே, அறிவுத் துறையிற் சிறந்த இந்நூல்கள், ஆரா அயராப் பேரின்பூட்டி நமக்கு நலம்பல பயப்பதாகும்.

அந்நூற் செல்வத்தை ஈந்த நம் புலவர் பெருமக்கட்கு நாம் ஆற்றவேண்டிய கடமையும், தமிழ்மொழி சிறப்பச் செய்யுந் தொண்டும், இந்நூல்களை ஆய்ந்து பயன்கண்டு இன்புறுவதேயாம் எனக்கூறி வேண்டி, இக்கட்டுரையை முற்றுவிக்கின்றோம்.

வாழ்க இயற்கை! வாழ்க தமிழ்மொழி!

கலைத் தாய்

[புதுவை முருகண்ணன்]

கங்குலிலே காணுகின்ற வானின் மீனில்
கருக்கொண்டிருப்பாளெங் கலைத்தாய் நல்ல
மங்காத மதியொளியில் இருப்பாள் மண்ணில்
மாண்புடைய கவின்கலைத்தாய் கதிர்க்கை பாய்ச்சும்
செங்கதிரோன் தோற்றத்தில் கலந்தெம் உள்ளங்
கொள்ளை கொள்ள எத்தனிப்பாள் செப்பும் காலைப்
பங்கயத்தில் சிரித்திடுவாள் தனது மக்கள்
பண்புகெட்டுப் போனதெண்ணிச் சோர்வாள் பின்னர்ச்,

சோலையிலே கூவுகின்ற குயிலின் பண்ணில்
தோகைவிரித் தாடுகின்ற மயிலின் ஆடல்
சாலையிலே மரந்தன்னைக் கொத்தும் புள்ளின்
தாளத்தில் இதழ்விரித்துச் சிரிக்கும் முல்லை
வேலையிலே அலைகின்ற அலைக்கூட் டத்தில்
வேடிக்கை காட்டிநிற்பாள் இயற்கைக் காட்சி
சாலையெலாம் அவள்தோற்றம் இருக்கும் இன்னும்
ஓவியன்றன் கலையுருக்கொண் டிருப்பாள் தாயே. (உ)

கற்சிலையை வடிக்கின்ற கலைஞன் கையில்
கலைவடிவாய் நின்றுநடஞ் செய்வாள் காணும்
கற்றவர்கள் நெஞ்சிலவள் இன்பம் சேர்ப்பாள்
கலக்கமுறும் தொழிலாளர் உழைப்பில் தோய்ந்து
பொற்புடைய கோயிலெலாம் தோற்றி வைப்பாள்
பொன்னுருக்கி நகைசெய்யும் தட்டான் கண்ணே
நற்கலைத்தாய் நகைசெய்வாள் கொல்லன் வேகும்
கூடத்தில் நண்ணிடுவாள் வையம் வாழ, (ங)

சொல்லாலே இவையெல்லாம் தீட்டிக் காட்டும்
சோர்வற்ற செம்புலவன் உள்ளந் தன்னில்
கல்லாரின் நெஞ்சையுந்தான் உருக்கும் வண்ணம்
கவிதைதந்து கவின்சேர்ப்பாள் காதல் பேசும்
வில்லார்க்கும் நுதல்மாதர் முகத்தில் நின்று
விளையாடல் புரிந்திடுவாள் என்றுங் காலை
இல்லாத பொருளில்லை அன்னோள் என்றும்
எங்குமே இருந்திடுவாள்! எந்தாய் வாழ்க! (ச)

பரிமேலழகர் உரை

[செல்வி. எஸ். கமலாதேவி, இரத்தினபுரி]

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு," என, கற்றவர் வியந்தும் கற்பகக்கனி எனும் தமிழ் உள்ளத்து அரும்பிய பொன்றாப் புகழ்மிகு புலவன் வள்ளுவன் எனும் தெள்ளிய புலவன் ஆக்கியதென மிளிரும் திருக்குறள் எனும் இருமை சான்ற இயல்நூல் இலக்கணப் பண்பும் இலக்கியச்செறிவும் ஒருங்கே நிலவும்வண்ணம் கற்றோரகத்தும் மற்றோரகத்தும் இலங்குகின்றமை மறுத்தலொண்ணா வுண்மையாகும். அவ்வரிய இலக்கியத்தின் நுண்பொருளை அந்நிலத்தவரும், எம்மதத்தினரும் செவ்விதின் உணரும்பெற்றி மேற்கொண்டு, நயமிகு உரைவளம் வகுத்துச்சென்றோர் எண்ணிலர் எனினும், பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார் எனப் பெரிய தமிழ் மூதறிஞர்போன்ற பதின்மரே என்பதை,

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பரிதி—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை கண்டா ரிவர்."

என்னும் வெண்பா ஒன்று வெளியிட்டவண்ணம், திருக்குறளின் நிறைசான்ற உரையாசிரியன்மார் என்று சிலர் இக்காலத்துக் கூறுவதை இலக்கியச் சிந்தனையாளர் யாவரும் அறிவர் என்னலாம். அன்னார் போற்றும் வண்ணம் திகழ்ந்த பரிமேலழகர் போன்ற சிலரே தம் சொல்லோவியங்களைத் திருக்குறளினுக்கு வடித்துச் சென்றனராயினும், திருக்குறள் தோன்றிய இதுகாறும் அப் பொன்னுறு நூலினுக்கு உரையியற்றிய உள்ளங்கள் அக்குழு வினரன்றிப் பிறரிலர் என்று அறுதியிட்டு உறுதிகூறுவது, உண்மை நிலவும் அறிவுடையார் செயலன்று.

பரிமேலழகர் தீட்டிய மைவண்ணம் பசுந்தமிழ் நூலினுக்கு உரையெனத் தோற்றுகின்றது. 'பால் எல்லாம் நல்லாவின் பால் அல்ல,' என்ற பழமை நிறையும் சொற்றொடரில் அமையும் உவமை நயம், பாரிலமைந்த உரை எல்லாம் பரிமேலழகன் உரையாமோ என்றபோது மறைகின்றது. நன்மையும், தூய்மையும், வெண்மையும் அன்றும் இன்றும் என்றும் பொழிவது நல்லாவின் பால். ஆனால் உரையாசிரியன் பரிமேலழகன் வடித்த உரைவளம், அவன் வாழ்ந்த அக்காலத்துக்குக் கனிவுற்று மற்றவர் அறியா மாணிக்கமாக அமைந்தபோதும்! அற்றேல் அப் பெருமான் உரையினில் பல, நயமற்றுப் பொய்ம்மை

கொண்ட கருத்துகள் செறிந்து தோன்றுவன்றோ? அழகர் எழுதிய குறள் உரை, பல்லாற்றானும் அறிவு நிலவும் தமிழ் உள்ளத்தினுக்குப் பொருந்தாது போயினும், சில பாக்களுக்காயினும் அவர் வரைந்த நயங்கள் போற்றற்குரியன என்னல் மிகையன்று. அந்நிலையில் மணக்குடவர் ஏனும் தமிழ்மறை தந்த தவமிகு செல்வர் தோன்றாதுபோயின், அழகரின் உரையின் நயமும் நயமின்மையும் ஒருகால் மங்கலாமன்றோ?

இத்தகைய பரிமேலழகர் எழுதிய உரையொன்றே காய்தல் உவத்தலின்றி ஏற்றுக்கோடல் சாலவும் நன்று என எண்ணி அவ்வுரையை மேற்கோடல் மேன்மையளிப்பதன்று. அஃது அறிவினது வளர்ச்சியின் தளர்ச்சியைப் பறைசாற்றுவதன்றி ஒற்கத்தின் ஊற்றாம் துணையன்று. அன்றியும் பரிமேலழகருக்கே, திருக்குறளைப்பற்றிய உரிமையுண்டெனவும், அவர் கூறும் உரையினிலேயே உண்மை ஊறுகின்றது எனவும் கூறி, வெண்மையராதல் ஒண்மையதாமோ? இன்று என இயம்பச் சான்றுகள் பலவுள.

அழகியாருக்குத் திருக்குறளில் எத்தகைய இலக்கிய உரிமை உளதோ, அவ்வுரிமை அறிவுச்[illegible]ஒளி இலங்கும் எத் தமிழ் உள்ளத்தினுக்கும் உளது என்பது மறுத்தல் ஒண்ணா மாற்றமாகும். எனவே, சீர்மையும் நேர்மையும், அறிவின் ஆழமும், தமிழ்ப் பண்பும் ததும்பும்வண்ணம் ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மைத்திறனால் சிலர், அழகியார் மேற்கொண்ட பிழைகளையும் கழுவாய் அற்ற வரைவுகளையும் ஆங்காங்கே வெளியிட்டுள்ளமை, செந்தமிழ்ச்செல்விபோன்ற இலக்கியச்செறிவு சான்ற தமிழ்ப்பத்திரிகைகளில் யான் கண்ட நாட்கள் பல. ஆகலின், திருக்குறளுக்குச் சிறந்த முறையில் அறிஞர் உள்ளம் ஏற்கும்வண்ணம் நல்ல கருத்துக்கள் நிலவ, தெள்ளிய உரைவளம் வகுத்தால் அதைத் தடையின்றி ஏற்றுக்கோடல் சாலுமேயன்றி அவ்வாசிரியர்மீது தோன்றிய வெறுப்பினால் உரையைப் பழித்தல் செவ்விதன்று.

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்."

என்பது, அழகு நிறையும் திருக்குறள். இவண் கேட்டதாய் எனும் சொற்றொடருக்குப் பரிமேலழகர் என்ன நயம் வரைகின்றார் எனக் கருணைகொண்டு நினைவுகூருமாறு வேண்டுகின்றேன். —"பெண்ணியல்பாற் றானாக வறியாமையிற் கேட்ட தாய்," என்றார்—இது பால் போன்ற பரிமேலழகர் உரைவளம். உண்மையில் அறிவுசான்ற எந்தத் தமிழ் அன்னையும், தாய்மை

தங்கிய தமிழ் உள்ளமும் வெறுக்கும் விரிவுரை என்று தயங்காது கூறுவேன். பெண்கள் ஆண்களைவிட உடலமைப்பில் மென்மைபெற்று மெல்லியலார் எனப் புலவர் புனையலாமன்றி, அறிவினிற் குறைந்தார் என்றல் ஏற்றுக்கோடற்குரியதன்று. "அறிவுடைப் பல நூல் அமைவுறக் கற்பினும் பெண்மை என்பது பெரும் பேதைமை யுடைத்," தென வரைந்த மாண்பற்றோர் மறைந்தனர். மறைந்திலர் எனினும், ஈண்டுப் பேதைமை என்பது, அறிவின்மையை ஒருபொழுதும் குறிப்பதல்ல. கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை பெண்தன்மை யாகலாமேயன்றி அறிவின் நிறைவு குறைதலைக் குறிப்பதன்று.

எனவே, மாதவம்செய்து மங்கையராகத் தோன்றிய பெண்பாலாரை இழிவுபடுத்தும் இவ்வுரையினைத் தவறுடைத்து என்றெண்ணிக், 'கேட்டதாய்,' என்ற செவ்விய தொடரினுக்குப் புத்துரை வரைந்தால் அது சிறுமையின்பாற்படுதல் ஒல்லுமோ? கேட்டதாய்—இயற்கையறிவு சிறிதேனும் நிரம்பிய தாய் எவளும் தன் குழந்தையின் கல்விவளத்தினை அறிந்து இன்புறும் பெற்றியுற்றவளே. ஆண்டவன் அருளிய செவியும் உள்ளமும் வினவிக் கேட்கலாம். ஆனால் அதில் இன்பம் இல்லை. "உங்கள் மகள் இவ்வாண்டுத் தேர்வில் எவ்வளவு திறமையான புலமைகொண்டு முதன்மை பெற்றுவிட்டாள்; யாங்கள் யாவரும் உள்ளமார உவகைக் கடலில் மூழ்குகின்றோம்," என்று அயல் இல்லாள் ஒருத்தி கூறக்கேட்பின், அத்தாய் உண்மையில் பெருமிதம் கொள்வாளா இல்லையா? என்று தமிழ்நாட்டுத் தாய்மாரிடமன்றி எந்நாட்டாரிடமும் என்றும் கேட்கலாம். ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மை அவளது புன்முறுவலிற் காணலாமன்றோ?

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

இக் குறளினைக் கற்று, பரிமேலழகர் உரையினைப் பாடம் பண்ணிய பாதிரியார் ஒருவர், 'எச்சம்' எனும் சொல்லினுக்கு மக்கள் என்றமை நினைவுகொண்டு, செய்யுளை மாற்றிய ஆற்றலைப்பற்றிய வரலாறு, வித்வான், தியாகராசச் செட்டியார் வாழ்வில் அமையும். எச்சம் என்ற தூய தமிழ்ச்சொல், எஞ்சி நிற்பதைக் குறிப்பது என்பதை, அறிவு கனிந்த உள்ளமே அறியவேண்டும். பரிமேலழகர்—"இவர் நடுவுநிலைமை யுடையர் இவர் நடுநிலைமை இலர் என்னும் விசேடம், அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்,"—என்கிறார். ஒருவ

ருக்கு மக்கள் இல்லாமற்போயின், அவரைத் தக்கார் என்றோ தகவிலர் என்றோ அறிவது யாங்ஙனம்? எல்லாருக்கும் மக்கட் பேறு உண்டு என வள்ளுவர் கூறுவதாகப் பரிமேலழகர் எண்ணினால் அவருக்குப் பரியும் அழகும் பொருந்தாவன்றோ? எனவே, ஒருவர் இம்மண்ணுலக வாழ்வைவிட்டு நீங்கும்போது விடுத்துச்செல்வது அவருடைய செயல்களால் அமைந்த நன்மையும் தீமையும்; மற்றையன நில்லாத தன்மையன. எச்சம் என்பதற்கு எஞ்சிநிற்கும் புகழ் அல்லது பழி என்பதே சிறந்த பொருளாகும்.

> "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
> உடம்போ டுயிரிடை நட்பு."

எனும் குறளினுக்குப் பலவகையான பொருள் கூறப்படுகின்றது. தண்டபாணி என்ற பெரியார் எழுதிய அறத்துப்பால் உரையினைச் சிறிது நோக்கின் இப்பாட்டின் உரையும் தெள்ளிதின் புலப்படும். குடம்பை என்பதை முட்டை என்றும், பறவையின் கூடு என்றும் பொருள் வரையப்படுதல் காண்கிறோம். இருவிதப் பொருளும் மறுக்கப்பெறும் நிலையில் அமைதல் கண்கூடு. —"முன் தனியாத முட்டை தனித்துக்கிடப்ப அதனுளிருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்துபோன தன்மைத்து,"—என்கிறார் அழகியார். அவ்வாறுரைப்பின் சில ஐயங்கள் எழலாம். சிறுபறவை முட்டையினைவிட்டு நீங்குகின்றபோது அம்முட்டை உடைந்து விடுகிறது. ஆனால் மக்கள் உயிர் பிரிந்து செல்லுங்கால் அத்தகைய வெளிப்படையான உடைதல் எங்கே நேரிடுகிறது? ஆனால் பறவையின் கூடு என்று பொருள் உரைத்தால், கூட்டை ஒருகால் பிரிந்த பறவை மீண்டும் அதனை அடைதல் கூடும். எனவே, குடம்பை என்ற சொல்லினுக்கு முட்டை தான் பரிமேலழகர் விடுக்கும்வண்ணம் உண்மைப்பொருள் என்பதினும், மேற்கூறிய இருவழியானும் பொருள் உரைக்கலாம் என்றல், இலக்கியச் சிந்தனையாளர் இயம்புவதாகும்.

மேற்கூறியாங்கு, சிந்தனை செய்வார்க்கு, பரிமேலழகர் உரை, பல பிழைகள் நிறைந்த உரையெனம் என்று திண்மையுடன் கூறுதல் இயலும். பரிமேலழகரது உரையின் திறமின்மையை அறிந்துகோடற்கு அவருரையை மாத்திரம் படித்துப் புலமை பெற்றுப் பெருமை சாற்றுதல் சான்றாண்மை அன்று. திரு. தாமரைக்கண்ணியம்மையார் போன்ற மாதர் திலகங்கள் தீட்டிய இலக்கியக் கட்டுரைகளைக் காணவேண்டும். அண்மையில் வெளியான "திருக்குறள் ஆராய்ச்சி" மறுமலர்ச்சி என மலருகிறது. அதனை, அறிஞர்கள் நன்முறையில் அங்கி

அதன்று அறிவொடு கற்றுத் தெளிந்தபின்னரோ, அறிஞர் குழாத்துக்குச் சாற்றுரை விடுத்தல் நலம்.

மேலும், இவ் இருபதாம் நூற்றாண்டு சிந்தனையிற் றிளைக்கும் திண்மையாளர் விரும்பியது. சிலப்பதிகாரம் சங்க இலக்கியமா? அதன் ஆசிரியர் எனப்பெறும் இளங்கோவடிகள் சேரமன்னன் இளவலோ? இறையனார் களவியலின் உரையிடத்துத் தோன்றும் மேற்கோட் செய்யுட்கள், களவியல் நூற்கு முற்காலத்தனவாயின், தஞ்சைவாணன் கோவை தோன்றிய காலமும் சங்க காலமல்லவே; இறையனார் களவியல் தோன்றுங்கால் தொல்காப்பியப் பொருளிலக்கணம் எங்கு ஒளித்தது? என இவை போன்ற எண்ணங்கள் நிகழ்கின்றன என்பதை நாம் செவியின் உணருவோம். பழையன கழியாது போயினும் புதியன புகுந்துதான் ஆகவேண்டும்!

சுருங்கக் கூறின் திருக்குறளினுக்கு யார் உரைவகுத்தாலும், அது பரிமேலழகர் உரையோடு மாறுபடுகிற ஒரு காரணத்தினால் அதனைக் கிழித்துவிட வேண்டுமென்றெண்ணாது, அப்புத்துரையில் உண்மை நிலவுகின்றதா என்றெண்ணி நடுநிலைமையுடன் காண்டல் பண்புடைத்தாகும்.

பண்பு

பண்பு என்பது, நாம் நல்லொழுக்கத்தினின்றும் வழுவாமல் இருந்து, மக்கள்நிலையைக் கண்டறிந்து அவ்வவர்க்கேற்ப ஒத்திருந்து வாழ்வது. இஃது, 'உலகியல் ஒழுக்கம்' எனலாம். இத் தன்மையறிந்து நடவாதவர் வாழ்க்கை, செம்மையுற நடவாது. அவர்கள் துன்பச் சூழலென்னும் கொடிபடர் நாம் கொளு கொம்பாக இருந்து தாழ்வுறுவர். அதனால் "பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்" என நல்லந்துவனாரும் கூறுவாராயினர். இத் தன்மையில்லாது வாழ்வாரை,

" அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்."

என்று பெருநாவலரும் அருள்வாராயினர்.

—செல்லூர்க்கிழார்

எந்நாளோ?

[நாஞ்சில், கா. கணபதி]

தமிழ்ப்புலவர் அமிழ்தூறும் நடையால் ஈண்டு
  தமிழ்ப்பொழிலை ஆக்கிடுதல் காண்பான் வந்தேன்
தமிழ்ப்புலவர் தமிழ்வளத்தால் வையம் காக்கும்
  தமிழ்ப்பண்பால் தமிழுள்ளம் செழிக்க வாழ்ந்தேன்
தமிழ்ப்புலமை பெறவிழைந்தேன் தமிழைக் கற்றேன்
  தமிழ்நாட்டில் தமிழ்க்கழகம் சிலவே கண்டேன்
தமிழ்க்கழகம் பலகாணும் நாளெந் நாளோ?
  தமிழ்ப்புலவர் செழித்தோங்கு நாளெந் நாளோ?

செந்தமிழால் சீர்வளர்க்கும் செந்நாப் போதார்
  செழுமையினால் அறம்வளர்க்கும் பாரி வள்ளல்
பைந்தமிழால் பாவளர்க்கும் இளங்கோ வீரன்
  பார்முழுதும் திறலோச்சும் கரிகாற் சோழன்
நொந்தவர்க் கருள்மணிமே கலைதன் பண்பார்
  நூல்கள்பல தருசீர்த்தொல் காப்பி யர்கள்
வந்திங்கே மகிழ்வூட்டும் நாளெந் நாளோ?
  வண்டமிழில் வண்மைதரும் நாளெந் நாளோ?

சென்றவர்கள் மீளுவது இயற்கை யில்லை
  திண்மையுளார் வீரத்தில் குறைவ தில்லை
இன்றுள்ள அறிஞர்களை ஏற்றந் தந்து
  இறுமாப்புப் பெற்றிடலே நல்லோ ராறு
நன்றுள்ளம் வந்திடுமோ நலமார் பண்பும்
  நசையற்ற வசையற்ற உறுதி மிக்க
குன்றுள்ளம் குலையாமல் தகுதி நல்கும்
  கூரறிவு பெற்றுவரு நாளெந் நாளோ?

மேற்புலந்தறிஞர் கண்ட தமிழகம்

[புதுவை, வரத. வீரப்பன்]

<u>அ. எல்லைகள்</u>

1

டாலமி காலத்தில், இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் நெடுங்காலமாகவே நிலையாகக் குடியேறப்பெற்றுச் சீர்திருந்தி விளங்கியது. அஞ்ஞான்று தென்கிழக்குக் கரையோரமே யன்றிச் சற்றேறக்குறையக் கங்கையாற்றின் கழிமுகம் வரையாக வுள்ள நிலக்குறை முழுமையும் தமிழர் உறைவிடமாகக்கொண்டு அமைதியாக வாழ்ந்து வந்தனர்.

—கால்டுவெல்.

2

ஒரிசாக் கடற்கரையினின்று குமரிமுனைவரையும், இம் முனையினின்று மலையாளக் கடற்கரையூடே மேல் நோக்கிக் கொச்சிவரையும் தமிழ்மொழி பேசப்படுகிறது. இந்நிலப் பகுதியில் உள்ள புலவர்கள் செய்யுள்வடிவில் நூல்கள் இயற்றுகின்றனர். இதனால் பெரும்பாலோர்க்குச் செவ்வை யாகப் படிக்கத் தெரிந்திருந்தும் அவற்றின் பொருள் விளக்க மாவதில்லை.

—சோன்னேரா.

3

வடபாலில், கோதாவிரியாறு பிறப்பூர் எல்லைதொட்டுக் குமரிமுனைப் பகுதியின்கண் உள்ள தொடர்மலைகளுள், மிகப் பெரிய தொன்றின் (ஆனை முடி 8850 அடி) கீழ்ச்சாரல் வரை யும், தெற்கிலும் கிழக்கிலும் கடற்கரைகளால் சூழப்பெற்றும் பரந்து விளங்கும் மாபெரும் நாடொன்றுளது. இதனுள் ஒரு பகுதி "பாண்டியோன்" நாடாகும். இதனை அராபியர் கரு நாடகம் எனப்பெயர் வழங்கினர். இம்மாநிலத்தின் கடற் கரைப் பாங்கிலும் உட்புறத்தேயும் அரசுகள் பல நிறுவப்பெற் றிருந்தன. அவற்றின் பெயர்கள் இன்றளவும் நிலவுகின்றன. அரியணைகளோவெனில் அடியோடு அழிந்துபோயின.

—தெமர்லே

4

நன்னிகைக்கு 16 ஆம் பாகையில் உள்ள கிருட்டினையாற் றின் ஊற்றுக்கண் தொடங்கி அவ்யாறு கடலொடு கலக்கும் இடம் முடிய நீண்டு விளங்கும் நிலப்பகுதியைப் பாண்டிய மக் கட் டொகுதியின் வாழிடத்து வடவெல்லையாகக் குறிக்கின்றார்

பிளினி. அம்மக்கள் மிகுந்த வல்லமையுடையாராய்த் திகழ்ந்தனர்; முந்நூறு நகரங்களில் வாழ்ந்தனர். 1,50,000 போர் மறவர்கள் அடங்கிய படையைத் திரட்டும் ஆற்றல் மிக்கவராய் மிளிர்ந்தனர். இவர்கள் உறைவிடம் குமரிமுனைவரை நீண்டு "பாண்டி மண்டல"மெனப் பிளினி கூறும் அரசியலாக உருவாகியது. இந்தப் பண்டைக்காலத்துப் பாண்டிய அரசர் கால் வழியினரே, இந்திய வரலாற்றின்படி, 362 தலைமுறைகளாக மதுரையில் செங்கோலோச்சியவர்.

—கோலென்தேபார்.

5

தமிழ்மண்டலத்தின் நிலப்பரப்பு, வங்காளக் குடாக்கடலின் கரையோரத்திருந்து தொடர்மலைகளின் கிழக்குக் கரையினது அடிவாரம் வரை ஒரு புறமும், நள்ளிகைக்கு மேற்பாலில் 13° 54′ஆம் குறியீட்டுக்கும் உச்சத்திற்கு 78° 3′ ஆம் குறியீட்டுக்கும் இடையேயுள்ள பெண்ணையாறு முதல் சோழமண்டலம் என்று அழைக்கப்பெறும் கடற்கரையின் எல்லையிறுதியாகும் கள்ளிமேட்டு (கலிமீர்) முனையீறாக அகன்றுள்ளது.

—லெகூதேப்ளேக்ச்.

6

விந்தியமலை என்றென்றும் ஆரியநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே இயற்கையால் எழுந்த எல்லையாக அமைந்துள்ளது. தொடர்நிலைச்செய்யுட் புலவர்கள் (பெருங்காப்பியப் புலவர்கள்) தமிழகத்துப் பேரரசுகளைக் குறிப்பிட்டிருக்கின்றனரேனும், அவைகளைப்பற்றி மிகச் சிறிதளவே அவர்கள் அறிந்தனர் ஆதல் வேண்டும். அவைகளைச் சேர சோழ பாண்டிய அரசுகள் என்பர். இக்காலத்து மதுரை திருநெல்வேலி மாவட்டங்களின் பெரும்பகுதி அடங்கிய பாண்டியநாட்டின் மிகப் பழமையான தலைநகர், திருநெல்வேலியில் தாம்பிரபரணியாற்றங்கரையில் அமைந்த கொற்கையாகும். இத்தலைமைப் பேற்றைப், பிற்றை நாளில் மதுரைமாநகரம் பறித்துக்கொண்டது. சோழநாடு ஒருகால் "கொரமாண்டல்" கரையில், நெல்லூரிலிருந்து புதுக்கோட்டைவரை நீண்டும், அதன் மேற்கெல்லை கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் இக்காலத்துக் கடப்பை மாவட்ட வரம்பு மட்டும் சுருங்கியதென்றாலும், முன்னர்க் குடகு (Kurg) நாட்டு எல்லைப்புறம் வரையும் அகன்றிருந்தது. உறையூர் (பழைய திருச்சிராப்பள்ளி) சோழநாட்டின் தலைநகராகவும் காவிரிப்பூம்பட்டினம் இதன் துறைமுகப்பட்டினமாகவும் விளங்கின திருவாங்கூர். மலையாளமாவட்டம் கொச்சி இவ்

விடங்களிலும் சுற்றுப்புறங்களிலும் சேரர் அல்லது கேரளர் தங்கி வாழ்ந்தனர். கொச்சியின் அருகே பெரியாற்றங்கரையிலே உள்ளதும், பின்னை நாளில் திருவஞ்சிக் களத்திற்குத் தோற்றுவாயாக இருந்ததும், இன்று திருக்கரூர் என்று பெயரிட்டழைக்கப் பெறுவதுமான வஞ்சியே, சேரநாட்டின் பழைய தலைநகராகும். கொங்குநாடு (கோயம்புத்தூரும் தென் சேலமும்) பிந்திய காலத்தில் "கேரள" என்னும் பெயர் ஏற்றிருந்ததாயினும் இதனினின்று தனித்தே விளங்கியது.

—பார்னெட்.

அசோகரின் நேர் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலும், நன்கு வரையறுக்கப்பெறாத பாதுகாப்பின் கீழ் இவர்தம் தலைமை ஆட்சியோடு இணைந்திருந்த நாடுகளுடனும் சேர்ந்து, தெற்கே பலமுறை நிறுவப்பெற்ற பழந்தமிழ் நாடுகளின் எல்லைகளைத் தொடுமாறு பரந்து விளங்கின.........

நெல்லூருக்கு அணித்தேயுள்ள வடபெண்ணையினின்று மேற்குக் கடற்கரையில் உள்ள கலியாணபுரியாற்றுக்கும் (கடப்பையினூடே சித்தல் துர்க்கத்திற்குத் தெற்காக) நீவக்குறையின் கடையீற்றுக்கும் பரந்திருந்த தமிழ்நாடுகள் தென்புறத்தில், அல்லது மலையாளக் கடற்கரையில் பிறங்கிய கேரளபுத்திர, சத்தியபுத்திர நாடுகளைப்போலவே தன்னரசு உரிமையுடையனவாக மிளிர்ந்தன என்பதில் ஐயுறவில்லை.

—ஸ்மித்.

8

தென்னாட்டின் அகன்ற நிலத்தை இன்று வழக்கிலுள்ள சொல்லாட்சித் துணைகொண்டு விரித்துரைப்பின், "வட சர்க்கார்" மாவட்டங்கள், விசாகப்பட்டினம் கஞ்சம் மாவட்டங்கள் இவையிற்றினை சென்னை (இராசதானி) வளநாட்டினின்று கழித்துத், தன்னரசு ஆட்சிக்குட்பட்ட மைசூர், கொச்சி, திருவிதாங்கூர் குறுநிலங்களை அதனோடு கூட்டினால் உளதாகும் நிலப்பரப்புக்கு நேர் என்னலாம். தமிழர் இனமும் தமிழ்மொழியும் இயல்பாகவே நிலவும் நல்லுலகம் இதுவாகும். இதற்கிணங்கவாறு, பண்டைநாளில் அதன் பெரும்பகுதிக்குத் தமிழகம் அல்லது தமிழ்நாடு என்றே பெயர் வழங்கியது. கிழக்குக் கடற்கரையில் சென்னைக்குச் சிறிது மேற்புறத்தில் உள்ள புலிக்கட்டை (பழவேற்காடு)த் தமிழகத்து வடவெல்லையின் ஓர் இடமாகவும், மேற்குக் கடற்கரையில், மாகிக்கு (Mahe)த் தென்புறத்தும், படகரா (Badagara) விற்கு

அணித்தேயும் உள்ள வெண்கல் மலையைப் பிறிதோர் இடமாக வும், இவ் இருமுனைகளையும் ஒன்று சேர்க்கும் எல்லைக்கோடு, சென்னைக்கு வடமேற்கில் நூறாவது மைலில் இலங்கும் திரு வேங்கடம் அல்லது திருப்பதிமலையைச் சுற்றிக்கொண்டு பாதகாராவிற்குத் தென்பாலில் சாய்ந்து செல்லுவதுமாகக் கொள்ளுவது தொல் வழக்கு. தமிழகத்தின் வடகிழக்கு எல்லையை வடபெண்ணைக்கு அண்மையிலுள்ள நெல்லூர் வரை யும், வடமேற்கெல்லையை மங்களூருக்குத் தென்புறத்தில், சந்திர கிரியாறு வரையும் பெருக்கிக் கூறுவது பின்னையோர் வழக்கு.

—ஸ்மித்

9

பிளினி வாழ்ந்த நாளினும், செங்கடற் செலவு நிகழ்ந்த காலத்தும், மலையாளக் கடற்கரையின் ஒருபகுதி, பாண்டியர் ஆட்சிக் குட்பட்டிருந்ததென்பது திண்ணம். இப் பாண்டியர் செங்கோலாழி இவர் தம் தலைக்காலத்து அரசியற் பொறுப்பி லிருந்த நாடுகளிலேமட்டும் அன்றிப் புறத்தேயும் நீண்டதொலைவு பரந்திருந்ததென்பதை விளக்க இஃது ஓர் எடுத்துக்காட் டாகும்... ...

"நடுநிலத்ததும், வாணிபத் தலைநகருமான மதுரைக்கு நெடுந்தொலைவில் உள்ள மேற்குக் கடற்கரையின் ஒரு பகுதி, பாண்டியமன்னன் அரசாட்சியின்கீழ் விளங்கிய," தெனப் பிளினி தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

—கால்டுவெல்.

ஆ. நிலப்பரப்பு

10

பண்டைத் தமிழகம் இன்று தமிழ்கூறும் நல் உலகினும் மிக வகன்றிருந்தது. துளு மலையாளம் கன்னடம் வழங்கும் நாடுகள் இதனுள் அடங்கியிருந்தன. இலங்கைத்தீவும் தமிழ் மொழி பேசும் மக்கள் உறையும் பெருநிலத்தோடு நெருங்கிய உறவு பூண்டிருந்தது.

—ஸ்மித்

இ. இயற்கையமைப்பும் நிலவளமும்

11

குமரிமுனை முதல் கள்ளிமேட்டுமுனையீறாகப் பரந்துபட்ட கடற்கரையை முத்துக் குளிக்குந்துறை எனப் பெயரிட்டழைப் பர். இதனை இலங்கைத் தீவினின்று பிரிப்பது மன்னார் வளை குடா. இப்பகுதியிற்றான் முத்துக்குளியல் மிகுதியாக இடம்

பெறுகிறது. கடல்சார்ந்த அந்நிலத்திற்கு அந்நாட்டவர் மறவ நாடு எனப் பெயர் வழங்குவர்.......

இலங்கைத் தீவைப்போன்றே இராமேசுவரம் என்னும் திட்டும் முற்காலத்தில் இந்தியப் பெருநிலத்தோடு இரண்டற இணைந்திருந்ததென்றும், நிலநடுக்கத்தின் விளைவாக அது இங்ஙனம் பிளவுபட நேர்ந்ததென்றும் முடிபு கட்டுகின்றனர் சில நூலாசிரியர்கள். இஃதன்றியும், இந்தியாவில் இக்கரைப் பாங்கரில்தான் எரிமலை அனல் உமிழும் காட்சி புலனானது.......

கள்ளிமேட்டு முனைக்கு மேற்பாலில், "கொரமாண்டல்," கடற்கரை தொடங்குகிறது. இன்று தஞ்சை மாவட்டம் என்னும் சோழமண்டலத்தைக், "கொரமாண்டல்," என்று பெயர் திரித்து வழங்கினர் போர்த்துக்கேசியர். அந்நாட்டவர் அதனைத் தமிழ்மண்டலம் என்றே அழைப்பர். ஆங்கு மிகுதியாக வாழ்பவர் தமிழர் ஆதலின், மார்க்கோபோலோ காலத்தில், இதனை "மகா பார்," பெரிய நாடு (பார்-உலகு) எனப் பெயரிட்டழைத்தனர். "அக்கரை நெடுகவும் ஒரே மணற்காடு. மூன்று மைல் அளவு அகன்று தோன்றும் அம்மணற் பரப்பில் புதர்களும் காட்டுக் கள்ளிகளும் அடர்ந்துள்ளன. அம் மணல் வெளிக்கப்பால், மிகுந்த செழுமை நலம்வாய்ந்த நிலமாக மிளிர்கிறது. ஆண்டுமுழுதும் வளம் குன்றுது பயன் ஊட்டும் விளைநிலங்களே எங்கணும் காட்சியளிப்பன......"

தஞ்சைமாவட்டம் ஒரு பொழுதாயினும் **மொகலியர்** (மொகலாயர்) அரசியற்றலைமைக்கு அடங்கியிருந்ததில்லை.......

ஆங்கு வாழ்வோர் கைவினைகளிலும் உழவுத் தொழிலிலும் சிறந்தோர் ஆவர். இவர்தம் வளம் மிகுந்த நாட்டில் தென்னை மரங்கள் வரைஇகந்து உள்ளன. அந்நாட்டில் தொண்டைமான் என்னும் பெயருடைய சிறு கோட்டம் ஒன்றுளது. உறையுளாகவும், கடக்க ஏலாத அரணாகவும் அமைந்த மலைகளின் உதவியால், அக்கோட்டத்து மக்கள் அயலார் ஆட்சியினின்று தற்காத்துக் கொண்டனர்.

—தேமர்லே

12

தொடர்மலைகள் தென்பாலில் கூர்ந்து சென்று ஒன்று கூடும் நடுவிடத்தே அமைந்த குமரிமுனை, தீவக் குறையின் இருபக்கங்களையும் பிரிக்கிறது. மேற்புறம் மலையாளக் கடற்கரை யென்றும், கீழ்ப்புறம் சோழமண்டலக் கடற்கரை யென்றும் பெயர் பெறும். தாழ்நிலத்தில் உறையும் மறவரும் பரத

வரும் நம்மனோர்க்கு நன்கு விளங்காத உருவவழிபாடு புரிகின்றனர். இவ் வொருவகைத்தான கடலிணைக்கால் (சலசந்தி) முத்துக்குளியலுக்குப் பரந்த புகழ் வாய்ந்துள்ளது. இந்தியாவிலே காணக்கிடைக்கும் மிகச் சிறந்த முத்துக்கள் குமரி முனையிலும், தூத்துக்குடியிலும் எடுக்கப் பெறுவதால் இதனை, முத்துக் குளிக்கும் துறை என்று பெயரிடுவாராயினர். ஆங்கே நீரின் அடிப்புறத்தில் உள்ள கற்பாறைகளின்மீது சாம்பல் வண்ண அம்பரும் அகப்படுகிறது. இதன் தூயதன்மை மல்டீவ் (மலைத்தீவு) களிலும் மடகாஸ்கரிலும் எடுக்கப்பெறுவதற்கு இணையானது.

—அபே துய்யோன்

13

சோழமண்டலக் கடற்கரை, நள்ளிகைக்கு மேற்பாலில் எட்டிலிருந்து பதினெட்டாம் பாகைக்கு நடுவேயும், குமரி முனையினின்று ஒரிசாக் கடற்கரைவரையும் பரந்துள்ளது. மேலும், இந்தியத் தீவக்குறையின் கிழக்குக் கடலோரத்தும், கங்கைக்கு இப்பாலும் நிலவும் நிலப்பரப்பை அது தன்னுள் அடக்கியுள்ளது. ஆசியாவின் இப்பகுதி எழிலாலும் வளத்தாலும் தலைசிறந்து மிளிர்வதைப்போலவே, நெடுங்காலந்தொட்டுப் பயன் ஊட்டுவதிலும் இணையற்று விளங்குகிறது......

வானத்தின் வனப்பும், காலநிலையின் இனிமையும், சிறப்பாக வளம் கொழிக்கும் விளைபொருள்களும் பிறவிடங்களினும் இப் பகுதியைத் தகுந்த உறைவிடமாகத் தேர்ந்தெடுக்குமாறு போர்த்துக்கேசியர்க்குத் துணைசெய்தன.

—தேலாப்ளோத்

14

உலகத்தோர் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட பொன், முத்து, மிளகு, கடல் வன்னக்கல் (கோமேதகம்), ஆய்ந்தெடுத்த பஞ்சு இவையன்ன பிற விளைபொருள்களைத் தமிழகம் பெற்ற நற்பேற்றின் பயனாய்ப், பண்டைக்காலந்தொட்டே அயல்நாட்டு வணிகர்கள் ஆங்குவர விரைந்தனர். தமிழர்கள் நாகரிகமுறையில் வாழ்க்கை நடத்துதற்கு இன்றியமையாத செல்வப்பொருள்களை வாணிபம் குறைவின்றி வழங்கியது; மேலும், அவர்கள் கடல்கடந்து செல்லவும் அஞ்சினர் அல்லர்.

—ஸ்மித்

15

வேறெங்கணும் பெறற்கேலா மூன்று அரிய விலைப் பொருள்களைத் தன்னகத்தே பெற்றிருக்கும் நற்பேறு வாய்ந்

துள்ளது தமிழ்நாடு. அம்முப் பொருள்களாவன: மிளகு, முத்து, கடல் வண்ணக்கல். ஐரோப்பாவின் வாணிப வட்டாரங்களிலிருந்து அளவு கடந்த விலை கொடுத்து மிளகு தருவிக்கப்பட்டது. மேலும், அத்துணை விலையேற்றமுடையதாக அது மதிக்கப் பெற்றதென்றால், கோத் அலாரிக் (Alaric the Goth) என்பவர் கி. பி. 409-இல், போரினால் விளைந்த அழிவுக்கு ஈடு தருமாறு உரோமையரை நெருக்கியபோது, 3,000 இராத்தல் மிளகு ஒப்படைக்கப் படவேண்டுமென்பதும் அவர் விடுத்த கட்டளையில் ஒரு கூறாக இடம் பெற்றது. இன்றளவும் பயன் தருவதாகவும், சிறப்புடையதாகவும் விளங்கும் தென் கடற்புறத்து முத்துக்குளிக்கும் துறையில் எண்ணிறந்த காலமாகத் தொழில் நடைபெற்று வந்ததோடு, அத்துறையை நாடி எல்லாக் காலத்தும் அயல்நாட்டு வணிகர்கள் குழுவாக வந்த வண்ணமிருந்தனர். பிளினி நன்கு ஆய்ந்து குறிப்பிடுவது போல், கோமேதகம் அல்லது கடல்வண்ணக்கல், பச்சைக்கல்லோடு (மரகதம்) நெருங்கிய தொடர்புடையதாகும். இஃது, இந்தியர் உரோமையர் இவரிருவராலும் சிறந்ததொன்றாக மதிக்கப்பெற்றது. செதுக்கு வேலையாளரின் அருமைப் பாடமைந்த கலைநிறைவேற்றத்திற்குத் தேவையான மூலப்பொருள்களாக அது அடுத்தடுத்துப் பயன்பட்டு வந்தது. இந்தியாவேயன்றிப் பிறவிடங்களில் இது அருகித் தோன்றுவதால் திறமை வாய்ந்த போலிப்பொருள்செய்வினைஞர், பளிங்குக் கற்களைக்கொண்டு இதனைப்போலவே சமைத்துத் தருவதில் பேரூக்கங் காட்டினர். இந்தியாவின் மணிதருகனிகள் (சுரங்கங்கள்) மூன்று எனக் குறிப்பு வரையப்பெற்றுள்ளது. அவையாவன: 1. கடல் வண்ணக்கல் காணக் கிடைப்பதாக டாலமி குறிப்பிட்ட புன்னாடா (Punnata) புனாடு அல்லது புன்னாடு. இஃது மைசூருக்குத் தென் மேற்கிலே, காவிரியோடு கலக்கும் கப்பானி (Kabban) யாற்றங்கரையிலே அமைந்த கிட்டூருக்கு அணித்தேயுள்ளது. 2. படியூர் அல்லது பட்டியாலி. இது கோயம்புத்தூருக்கு 40-வது மைலில், கிழக்கிற்கும் தென்கிழக்கிற்கும் நடுவிடத்தேயுள்ளது. இவண் விளங்கிய கனியில் கடந்த 1820-ஆம் ஆண்டு வரையுங்கூடத் தொழில் இனிது நடைபெற்று வந்தது. 3. சேலம் மாவட்டத்தின் வடகிழக்கு மூலையிலும், கோலார் தங்க வயலுக்கு அண்மையிலும் உள்ள வாணியம்பாடி, இக்கனிகளுக்கு நிலைக்களன்களாக இருந்த மாவட்டங்களில் ஏராளமாக அகப்பட்ட பல்வகை உரோமைய பொற்காசுகள் நிறைந்த புதையல்கள், பழங்காலத்திலே தென்னிந்தியாவில் செம்மணி (இரத்தினம்) விற்பனை பெருக்கமுற்றிருந்தமைக்குச் சான்று பகர்வனவாகும். சிவப்புக்கல் (செம்பு) நீலக்கல் (இந்திரநீலம்)

இவற்றின் இனத்தைச் சார்ந்ததும், சேலத்திலும் கோயம்புத்தூரிலும் மிகுதியாகக் கிடைத்ததுமான கனிப்பொருளாம் குருந்தக்கல். தூய தமிழ்ப்பெயர் (குருந்தம்) ஏற்றிருப்பதொன்றே, இந்தியாவின் அருமணிக் கனிகள் தரும் பொருள்களைப் பொறுத்தமட்டில், முந்தைய ஐரோப்பா எத்துணை நெருங்கிய தொடர்பு பூண்டிருந்தது என்னும் வேறொரு குறிப்புக்கும் இடந்தருகிறது.

—ஸ்மித்

ஈ. காலத்தின் தட்ப வெப்பநிலை

16

இந்தியாவின் தட்ப வெப்பநிலை உள்ளத்திற்கு இன்பமும், உடலுக்கு நலமும் பயப்பதில், இவ்வுலகத்து நாற்பெரு நிலப் பிரிவுகளிலேயே நனி சிறந்து விளங்கும் காலநிலையோடு ஒத்த தொன்றாக வைத்து மதிக்கத் தகுவதாகும். ஆங்கு இருபெரும் பொழுதுகளாக ஆண்டு பகுக்கப்படுகிறது. அவ்விரண்டும் ஒன்றனையொன்று ஒழுங்குமுறை பிறழாது தொடர்ந்து வருகின்றன. ஏறக்குறைய ஐப்பசி முதல் பங்குனியீறாகக், காற்று வடபாலிலிருந்து இடைவிடாமல் வீசும். ஆண்டின் எஞ்சிய காலத்தில் அது தெற்குப் பக்கத்தில் நிலைப்படும். கப்பலோட்டிகள் இவ்விரு நிகழ்ச்சிகட்குப் பருவக் காற்றுகளெனப் பெயர் வழங்குவர். முன்னது சோழமண்டலக் கடற்கரைப் பாங்கரில் சுழல்காற்றை அடுத்தடுத்து உடன் அழைத்து வந்துவிடும்........

இடையிடையே சுழல்காற்றைத் தொடர்ந்துதோன்றி விளைநிலத்தை வளம்படுத்த வரையாது பெய்யும் சோனைமாரி பெரும்பாலும் மார்கழி இறுதியில்தான் ஓய்வு அடையும்.

(தொடரும்.)

அறிவு

அறிவாவது, ஒன்றை உண்மையாகக் கண்டு உணரும் இயற்கை. இவ் அறிவினாலேயே உலகம் இயங்குகின்றது. அறிவுத் திறம் குன்றாது செய்யப்படுவனவே, சிறந்தனவாக—உயரியனவாகக் கொள்ளப்படுகின்றன ; போற்றப் பெறுகின்றன—ஆகவே, உலகிடைக் காட்சி தரும் செயற்கைப் பொருள்களெல்லாம் அறிவால் ஆக்கப் பெற்றனவே. அவ் வறிவாற் படைத்தனவே சிற்பமும் ஓவியமும் காவியமும் பிறவும். அக் காவிய ஓவிய நுண்மையிற் றிளைத்துத் திளைத்து மகிழ மகிழ இறவாத இன்பம் மிக்காராய் இலங்குவர். அவ்வறிவிற் பயின்று மெய்ம்மை காண முயல்வதே மக்கட் பிறப்பின் மாண்பும் காண்பும் ஆகும்.

'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பது பொய்யில் புலவர் பொருளுரை.

செல்லூர்க்கிழார்.

வசந்த குசுமாகர மாத்திரை

[மயிலை, சீனி. வேங்கடசாமி.]

[நெடுநாளைக்குமுன் இப்பாட்டை ஓர் ஓலைச்சுவடியிற் கண்டேன். தாளில் படியெடுத்தெழுதினேன். அதில் இம்மருந்து செய்யும்முறையும், நோய்களும், அனுபானமும் காணப்படுகின்றன. மருத்துவ அன்பர்கள் கையாண்டு மக்களுக்கு நலம் செய்வார்களாக.]

கலி வெண்பா

அத்திமுக வைங்கரனை அடிபணிந்து தெண்டனிட்டுப்
பத்தியுடன் அர்ச்சித்துப் பாங்குடனே—சித்தி
வசந்தகுசு மாகர மாத்திரையின் மாமுறையை
இசைந்த உலாவான் இயம்பினேன்—உசந்தநல்ல
அக்கரா காரம் அதிமதுரம் கோஷ்டமுடன்
தக்கவெண் காரந் தனிலவங்கம்—மிக்கதுளைத்
திப்பிலியும் இந்தத் திவுசுக்குக் கால்பலமாய்ச்
செப்பமுடன் ஒன்றாகச் சேர்த்திட்டு—ஒப்பமிடும்
அன்பான (சாதி)லிங்கம் அரைப்பலமுந் தான்வாங்கி
இன்பமாங் குங்குமப்பூ இன்னங்கேள்—சொப்பனையே !
பச்சைக் கருப்பூரம் பாங்குளகோ ரோசனையும்
கச்ச விராகனெடை காணவிட்டு—இச்சையுடன்
சொன்னசரக் கெல்லாம் சுபமாகத் தான்சேர்த்து
நன்னிக் கலுவத்தில் நாடவிட்டு—பின்னவொரி
வஞ்சிமுலைப் பாலில் வளர்நா ளரைச்சாமம்
இஞ்சிரசந் தன்னில்இரண் டுசாமம்—சஞ்சமுடன்
நன்றாக வேயரைத்து நல்லசிறு பயறளவு
குன்றாமல் மாத்திரையாய்க் கொண்டுருட்டி—நன்றாக
எண்குறிப்பும் பார்த்து இயல்பான சாத்தியமாய்
திண்குறிப்பைக் கண்டால் திரம்பேசும்—நன்குறிப்பாம்
நாட்டுத்தேன் இஞ்சிரசம் நங்கைமுலைப் பாலதனால்
கூட்டிக் குழப்பியுட் கொண்டக்கால்—வாட்டமிடும்
பித்தசுரம் வாதசுரம் போரான சேத்துமசுரம்
சத்திசன்னி தோஷம் தலைவலியும்—முத்திரிப்பும்
கையசதி காலசதி கடுமுறைப்பு முப்பிரமும்
மெய்கடுப்பும் இத்தனையும் ஏகுமே—மைக்குழலே
பத்தியத்துக் கேற்ற பதார்த்தவகை யின்னதென்று
சித்தமுடன் செப்புகிறேன் சீராய்க்கேள்—முத்திபிடாக்
கத்தரிக்காய்ப் பிஞ்சு கலுமுருங்கோ..........
உத்த பொரிச்சாறும் ஒக்குமே—முத்திபிட்ட
வல்ல பிணிமாறி வாழ்ந்திருப்பார் தாரணியில்
வல்லவளாய் மெய்யில் வழுவுண்டாம்—தொல்லுலகில்
வாலுலகத் தன்வந்திரி வாகடத்தின் நூன்முறையால்
மானிடர்க்குச் சொன்னேன் மகிழ்ந்து.

மதிப்புரை

ஸ்ரீ சிவநாம அஷ்டோத்தர சதம்

[வெளியிடுவோர்: N. இராஜம் & கோ., வேப்பேரி, மதராஸ்-7.]

இதன் ஆசிரியர் ஸாஹித்திய வியாகரண பூஷணம் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் ஆவர். இவர்கள் இயற்றியது தமிழுரையே ஆகும். மூலம் ஸ்காந்த புராணத்திலுள்ளது. வடமொழியைத் தாய்மொழியாகப் பெற்றார்க்கே மூலம் பயன்பெறும். செந்தமிழைத் தாய்மொழியாகப் பெற்றார்க்குச் சிறிதும் பயன்பெறாமை கண்டே ஆசிரியரவர்கள் அரும்பாடுபட்டு மொழிபெயர்த்துள்ளார்கள். அவர்கள் தொண்டு போற்றற்குரியது. பல ஆகம புராணமேற்கோள்கள் காணப்படுகின்றன. பல ஐதிகக் கதைகளும் காணப்பெறுகின்றன. புத்தகம் நல்ல தாளில் செவ்வையான தோற்றத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா 0 15

புலவர் உலகம்

[திருவள்ளுவர் நிலையம்: 127, மேலமாசி வீதி, மதுரை.]

இதன் ஆசிரியர் பெரும்புலவர் ஜெகவீரபாண்டியனாரவர்களாவர். இவர்கள் கம்பராமாயணத்தில் ஆழ்ந்த பற்றும் நுண்ணறிவும் படைத்தவர்கள். அவர்கள் ஆய்வுரை புலவர் உலகத்துக்குப் பொன்போல் மிளிரும். உண்மை விழைவார்க்குத் தூண்டாவிளக்காய்த் துலங்கும். பல தொகுதிகளாக வெளியிடும் நிலையில் இது பத்தாவது தொகுதி முதலாவது புத்தகமாகும். தமிழுலகம் பெற்றுச சால் பெய்துமாக.

தமிழலங்காரம், தமிழ்த் துதிப்பதிகம்

இந்நூற்களை அருளிய ஆசிரியர் வண்ணச்சரபம் திருப்புகழ்ச் சுவாமிகள், முருகதாச சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ. தண்டபாணி சுவாமிகள் ஆவர். சீரிய செந்தமிழே ஆரியத்தினும் உயர்ந்ததென்று தமிழ்த்தெய்வமாம் திருமுருகன் திருமுன் திருவருளால் சீட்டொன்று பெற்ற செம்மைத் திறத்தால் உலகோர்க்கு உண்மை செப்ப உரைத்தருளியதாகும். 'தமிழினும் உயர்ந்தமொழி ஒன்று உண்டென உண்மைக்கு மாறாக உரைப்பவர்முன் ஆண்மையற்றுக் கேட்டுக்கொண்டிருப்பவனும் உண்மைத் தமிழனோகான்', என அடிகளே உள மைந்து உரைத்துள்ளார்கள்.

கொலை புலை உயர்வெனக் கூசாது கூறும் ஆரிய வேதத்திலும் அவற்றைப் பாவமெனக் கூறும் ஔவை, வள்ளுவனார் அருள்மொழியே சாலச் சிறந்ததெனச் சாற்றுகின்றார்கள். அது வருமாறு:

"நான்முகன் றக்கன் முதலோ ரனேகர் நவின்றவட
நூன்முழு துங்கொலை வேள்வியைப் போற்றும் நுடங்கரிய
வேன்முனைக் கண்ணௌவை வள்ளுவ னாதியர் விண்டதென் னூல்
ஊன்முழுப் பாவ மெனவே யடிக்கடி யோதிடுமே."

இப்படியே நூன்முழுதும் வலிய சான்றுகள் பல கொண்டு தமிழே உயர்வென நிறுவப்பெற்றுள்ளது. மேலும், சிவபெருமான், திருமால், திருமுருகன் முதலிய முழுமுதல் தெய்வங்களைப் பாடி மெய்யடியார்கள் அருட்செயல் பல புரிந்ததும், அத்தெய்வங்கள் அருந்தமிழ் வேட்கையால் ஆக்கிய வியத்தகு அருட்செயல்களும் போல வடமொழிக்கண் ஏதும் இன்மையையும் விளக்கியுள்ளார்கள். உண்மையான் நோக்குவார்க்கு இந்நூல் தமிழ் வரலாறேயாகும். ஆயின், நூற்றுக்குமேற்பட்ட வரலாறுணரலாம். ஒவ்வொரு தமிழன்பர்களும் பெற்று உண்மையுணர்ந்துய்வார்களாக.

தமிழ்த் துதிப்பதிகத்தின்கண் இயல்பாகவே தமிழ் பன்னிரண்டுயிரும், மூப்பாற்புள்ளி ஆய்தமும், பதினென் மெய்யும் அமைந்துள்ளமைக்குப் பொருந்திய தக்க சான்றுகள் காட்டியுள்ளார்கள்.

செய்திகளும் குறிப்புகளும்

பண்டைத்திறனுறப் பராவுதல்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம் முதலிய அரும் பெரும் நிலையங்களின் ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள், முன் பரவில் குறித்தாங்கு 15-6-'51-இல் திருவருளால் நல்ல நலத்துடன் திருநெல்வேலி வந்து சேர்ந்துள்ளார்கள். நலமும் உரமும் ஒருங்கெய்தி முன்னைத் திறலினராய்ச் சென்னை வந்தெய்தித் தொழிலினைக் கண்காணித்துச் சிறப்புறத் தென்றலும் தமிழும் நின்றிலங்கும் திருக்குற்றாலத்துத் தங்கியிருக்கின்றார்கள். அவ்வாறே விரைந்துவர அருளுமாறு ஆண்டவன் அடியிணையைப் பரவுவோமாக.

சிலப்பதிகார மாநாடு

"கற்புக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வமாம்" கண்ணகியாரும் அவர்தம் காதற் கொழுநராம் கோவலனாரும் பிறந்து வளர்ந்து சிறந்த திருநகர், காவிரிப்பூம்பட்டினமாகும். அவ்வூர், சோழர் தலைநகராகவும் தமிழகத் தனிப்பெருந் துறைமுகமாகவும் அந்நாளில் இருந்தது. இந்நாளிலோ கடலாலும் காலத்தாலும் கொள்ளப்பட்டுப் பெயர் மட்டும் நிலைத்த சிற்றூராகக் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் 'காவேரிப்பட்டினம்' என மரூஉ வழக்காக வழங்க இருக்கின்றது.

அவ்வூரின்கண் 15, 16, 17-6-'51 ஆகிய மூன்று நாட்களிலும் சிலப்பதிகார மாநாடு சிறப்புற நிகழ்ந்தது. சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள் தலைமைபூண்டார்கள். பெரும்புலமை வாய்ந்த செந்தமிழ்ச் சீரியோர் பலர், சிலப்பதிகாரத்தைப் பற்றித் திறம்பட விரிவுரையாற்றினார்கள்.

இம்மாநாட்டைப் பெருநிலக்கிழார்களும் தமிழன்பர்களும் அரிதின் முயன்று கூட்டுவித்தார்கள். மூன்று நாட்களும் சிலப்பதிகாரச் செந்தமிழ் முழக்கமே செறிந்தோங்கியிருந்தது. சிறந்த சிலப்பதிகாரத் தமிழர் பண்பாடு பண்டுபோல் மிளிர்ந்து விளங்குமேல் தமிழகம் தனிப்பெரும் தன்மை எய்தும். தமிழன்னை தனித்துணைபுரிவாளாக.

திருநெல்வேலி மாவட்டச் சைவ வேளாளர் மாநாடு

உடலுறுப்புப் போன்று உலக மாந்தர் கூட்டமும் உடங்கியைந்து வாழ்ந்து உய்திபெறப் பல்வேறு பண்பாடுகள் இயல்பாகவே அமைந்த மக்கட் குழுவினர் ஆங்காங்குக் காணப்படுகின்றனர். அக்குழுவினரைக் குலமெனவும், இனமெனவும், சமூகம் எனவும் அழைப்பர். ஒவ்வொரு குழுவினரும் கல்வி, பொருணிலை, உழவு, வாணிகம், கைத்தொழில், அரசியல் முதலிய பல துறைகளிலும் முன்னேறுதல் முறைமையாகும். உறுப்புகளுள் ஏதேனும் ஒன்று நலிவுறநேரின் ஏனைய வலிவுற்ற உறுப்புகளும் நலிவுற்ற நிலைமையையே எய்திப் பயன்பெற வழியின்றி வாளா இருப்பனவே.

ஆகவே, பொதுநல வாழ்வின் பொருட்டேனும் குழுநல வாழ்வு செழுமையுறல்வேண்டும். அக்குறிக்கோளுடன் தொடங்கப்பெறும் இம்மாநாடு வெற்றியுடன் விளங்கித் தொடர்ந்து பணியாற்றிப் பயன்பெறச் செய்து வாழ்விக்குமாக.

இம்மாநாடு 7, 8-7-'51 (சனி, ஞாயிறு) இரண்டு நாட்களிலும் தூத்துக்குடியில் நடைபெறும். திரு. சர். பி. டி. இராஜன் அவர்கள் தலைமை பூண்பார்கள். இராசபாளையம் பண்ணையார் இராவ்பகதூர் R. V. இராமசுந்தரம் பிள்ளையவர்கள் மாநாட்டைத் திறந்துவைப்பார்கள்.

கும்பகோணம் நகரமன்றத் தலைவர் M. C. S. இரத்தினசபாபதிச் செட்டியாரவர்கள் கொடியேற்றி வைப்பார்கள்.

திரு. R. P. சேதுப்பிள்ளையவர்கள், திரு. G. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், திரு. A. முத்துசிவன் அவர்கள் முதலான பல பெரும்புலவர்கள் விரிவுரையாற்றுவார்கள். இனநலம் கருதும் யாவர்களும் கலந்து வேண்டுவன செய்வார்களாக. இஃது ஒவ்வொருவரின் பிறப்புரிமையும் இன்றியமையாப் பெருங்கடமையும் ஆகும். இறவாப் பிறவாச் செந்தமிழ்ப் பெருந்தெய்வம் திருவருள் புரிவதாக!

ஈடில் இழப்பு

ஈழநாட்டுச் செந்தமிழ்ப் புலவரும், புலவர் நற்றுணைவரும், புரவலரும், பொதுநலத்தொண்டரும், கரவிலுளஞ்சேர் உரவரும், கடவுட் பற்றினரும், காந்தியக் கடைப்பிடியாளரும், ஈழகேசரி ஆசிரியரும், வள்ளலுமாகிய திரு. நா. பொன்னையா அவர்கள் 29-3-'51 வியாழன் இரவு வாராவுலக நெறியேறி மறைந்தனர். அவர்கள் பிரிவால் பொதுவாகத் தமிழ்நாடும், சிறப்பாக ஈழநாடும் கண்ணிலான் பெற்றிழந்த கதையாய்க் கடத்தற்கரிய பெருந்துன்பக் கடலுள் ஆழ்ந்து கரைகாணாது கலங்குவவாயின. என் செய்வாம்! "மருந்தில் கூற்றத்து அருந்திறல் கடந்து" இவ்வுலகில் தோன்றுதொட்டு இன்றுகாறும் பொருந்தி இருந்தார் எவரும் இலர். இதுவே உலகியற்கை; இதுவே உலகின் உண்மை உயர்வு.

இதனாலன்றே! திருவள்ளுவநாயனாரும்,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு." —திருக்குறள்: ௩௩௬.

என்று அருளுவாராயினர்.

திரு. பொன்னையா அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நாட்டுப்புறச் சிற்றூராகிய குரும்பசிட்டியில் விரும்பிய நலமெலாம் வாய்ந்த பெருங்குடியிற் பிறந்தனர். தெருளாலும் ஆள்வினையாலும் வறுமையை வென்றனர்.

இளமையில் பர்மா, மலேயா முதலிய வெளிநாடுகளிற் சென்று ஆள்வினைத் திறத்தால் மேன்மையுற்றனர். பின் தாய்நாடு திரும்பினர். செந்தமிழ்ப் புலவர் மறைத்திரு. கணேசய்யர் மாணவராய்ப் புலமையுற்றனர். சுன்னாகத்தில் தனலக்குமி புத்தகசாலையொன்று நிறுவினர். திருமகள் அழுத்தகமும் அமைத்தனர். சர். பொன்னம்பல இராமநாதர் பெயர் நினைவாய் ஈழகேசரி என்னும் தண்டமிழ்க்கிழமைத்தாள் சிறப்புற நடத்தினர். திரு. சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் நினைவுக்குறியாய்த் தொல்காப்பியத்தை அழகுறப் பதித்து வெளியிட்டனர். பல தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு இவர்களே பெருங்காரணர். பல்லாற்றானும் தமிழ்ப்பணியே புரிந்து தம் ஐம்பத்தொன்பதாம் அகவையில் பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பை நிறுவினர்.

இவர்தம் ஆவி, ஆண்டான் அடியிணைக்கீழ் இன்புற்று அமைதியுறுவதாக. இவர்தம் அரிய மனைவியார்க்கும், அன்பும் அருமையும் ஒருங்கமைந்த ஒரே ஒரு மகளார்க்கும் எங்கள் பரிவு உரிமையாகுக.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.